1a.6

மலையகத் தமிழ் மக்கள்

பொன்னி

மலையகத் தமிழ் மக்கள்

இரா. சிவச்சந்திரன்
குமாரி ஜெயவர்த்தனா

முதல் பதிப்பு | 1987

உரிமை பதிவு

□

விலை ரூ. நான்கு

□

இரா. சிவச்சந்திரன்

குமாரி ஜெயவர்த்தன

□

வெளியீடு :

பொன்னி

12, முதல் பிரதான சாலை

நேரு நகர்

அடையாறு

சென்னை - 20

□

அச்சு :

இராசகிளி பிரிண்டர்ஸ்

சென்னை-20

□

பதிப்புரை

வனாந்திரமாய் கிடந்த மலைப் பகுதியைப் பக்குவப்படுத்தி தேயிலை விளையும் பூமியாக மாற்றியவர்கள் மலையகத் தமிழ்மக்கள்.

இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 5.6 சதவீதமாக இருந்தாலும் அவர்கள் தங்கள் மண்ணை தேயிலை மணத்தின் மூலம் உலகம் முழுவதும் நுகரச் செய்தவர்கள்.

இலங்கைப் பொருளாதாரத்தில் முதுகெலும்பாக இருப்பவர்கள் தான் அவர்களுக்குள் அடங்கி இருக்கும் உன்னதமான வலிமையை அரசியல் ரீதியில் பயன்படுத்த முடியாத அளவில் ஒடுக்கு முறையின் கீழ் அடக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

வெளி உலகத்தின் காற்றை சுவாசிக்க விடாமலேயே பணயக் கைதிகள் போல் வைக்கப் பட்டிருக்கிறார்கள்.

இந்திய அரசும் இலங்கை அரசும் மலையக மக்கள் பிரச்சினை லட்சக்கணக்கான மக்களின் பிரச்சினை என்பதை உணரவில்லை. அதோடு தொடர்ந்து துயரத்துக்கு ஆளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போது ஏற்பட்டுள்ள இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கூட மலையக மக்கள் முற்றாகப் புறக்கணிக்கப் பட்டிருக்கிறார்கள்.

இவர்களின் குரல் இந்த இரு அரசாங் கங்களின் காதில் விழுவதே இல்லை.

மலையக மக்களின் வாழ்நிலை எவ்வளவு தூரத்திற்கு துயரத்திற்கு ஆளாகி இருக்கிறது என்பதை சிவச்சந்திரன் அவர்களின் கட்டுரை சித்தரிக்கிறது.

மலையக மக்களுக்கு எதிரான இனத்து வேஷம் எப்படி விதைக்கப்பட்டு வளர்ந்தது என்பதை குமாரி ஜெயவர்தனா அவர்களின் கட்டுரை சுட்டிக் காட்டுகிறது.

இவ்விரு கட்டுரைகளும் ஈழத்தில் வெளி யாகும் ஆய்வு இதழில் வெளியானவையாகும்.

தற்போதைய தேவையைக் கருதி தமிழகத் தில் நூலுருவில் கொண்டு வந்திருக்கிறோம்.

தமிழக மக்கள் எங்கள் முயற்சியை வர வேற்பார்கள் என்று நம்புகிறோம்.

'ஆய்வு' இதழுக்கும் கட்டுரை ஆசிரியர் களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றி.

மலையகத் தமிழ் மக்கள்
குடித் தொகை பண்புகளும்
சமூக பொருளாதார நிலைமைகளும்
— இரா. சிவச்சந்திரன்

தோட்டத் தொழிலாளரின்
அரசியல் உரிமை மறுக்கப்படல்
— குமாரி ஜெயவர்த்தனா

மலையகத் தமிழ் மக்கள் குடித்தொகைப் பண்புகளும் சமூக பொருளாதார நிலைமைகளும்

இரா. சிவச்சந்திரன்

இலங்கைவாழ் மக்களை மொழியடிப்படையிலேயே தமிழ்பேசும் மக்கள் எனவும், சிங்களம் பேசும் மக்கள் எனவும் வகைப்படுத்தலாம். இலங்கையில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் இலங்கைத் தமிழர், இந்தியத்தமிழர், இலங்கைச் சோனகர், இந்தியச்சோனகர் என நான்காக வகைப் படுத்தப்படுகின்றனர். இந்த வகுப்புமுறை 1911ம் ஆண்டிலிருந்து அரசால் வெளியிடப்படும் குடித்தொகை புள்ளிவிபர அறிக்கைகளில் எடுத்தாளப்பட்டு வருகின்றது. ஈழத்தில் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் பூர்வீகத்தமிழ் மக்கள் இலங்கைத் தமிழர் எனக்கருதப்பட்டனர். 19 ஆம் நூற்றுண்டுகளில் இலங்கையின் மத்திய மலைப்பிரதேசங்களில்

ஐரோப்பியரால் விருத்தி செய்யப்பட்ட கோப்பி, தேயிலை, இறப்பர் பெருந்தோட்டங்களில் தொழில் புரிவதற்காக தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறிய தமிழ்மக்கள் இந்தியத் தமிழர் என்று பாகுபடுத்தப் பட்டனர். அவ்வாறே இலங்கைச் சோனகர், இந்தியச் சோனகர் என்ற பிரிவுகளும் இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றும் தமிழ் பேசும் மக்களை வகைப்படுத்திற்று. இவர்களைத்தவிர மலாய் இன மக்களும் தமிழை மலாய் சொற் கலப்புடன் பேசிவருவதால் தமிழ் மொழி பேசுபவர்களாகவே கணிக்கப்படுகின்றனர். சிங்களமொழி பேசுபவர் கண்டிச்சிங்களவர் எனவும் கரையோரச் சிங்களவர் எனவும் 1971ம் ஆண்டு குடித்தொகை புள்ளிவிபர அறிக்கைகளில் பாகுபடுத்தப்பட்டுள்ளபோது 1981ல் இப்பாகுபாடு கைவிடப்பட்டுள்ளமைக்கு ஒற்றுமையைப் பேணுதல் எனும் அரசியல் நோக்குக் காரணமாகலாமெனவும் தமிழ் மக்களை நான்கு வகையினராக பாகுபடுத்தி வருவதற்கு பிளவுபடுத்தும் நோக்குக் காரணமாகலாமெனவும் கருதுவர். எது எவ்வாறாயினும் சில சமூக அறிவியல் சார் விடயங்களில் தெளிவு பெறுவதற்கு மேற்படி வகுப்பு முறையினை பயன்படுத்துவதில் தவறில்லை எனக் கொள்ளலாம்.

மலையகத்தமிழ் மக்களை பெருந்தோட்டத் தொழிலாளர் எனவும், இந்திய வம்சாவளித் தமிழர் எனவும் பலவாறு வழங்குவர். அவர்களுக்கு ஈழத்திலே சில நூற்றாண்டுகால தனித்துவமான வரலாறும் சமூகப் பொருளாதார பின்னணிகளும் உண்டு. ஈழத்தின் வளத்திற்கும் வாழ்விற்கும் பெருமளவு உழைப்பை நல்கிய அம்மக்கள், என்றும் அந்நியமயப்படுத்தப்பட்டவர்களாக வறுமையில் வாழ்ந்து வருகின்றமை கசப்பான உண்மையாகும்.

அதிகாரபூர்வமாக கடைசியாக 1981 ம் ஆண்டு பெறப்பட்ட குடித்தொகை கணிப்பீட்டின்படி ஈழத்தில் வாழ்கின்ற

மலையகத்தமிழர் 8, 25, 233 பேராகக் காணப்பட்டனர். இலங்கையின் மொத்த குடித்தொகையில் இவர்களின் பங்கு 5.6 வீதமாகும். மொத்தத் தமிழ் பேசும் குடித்தொகையில் (37, 97, 118) மலையகத் தமிழரது பங்கு 22 வீதமாகும். இலங்கையில் 1911 முதல் 1965 வரை மலையகத் தமிழரே சிங்களவருக்கு அடுத்த பெரும்பான்மையானவராக பூர்வீகத் தமிழரை விட அதிக எண்ணிக்கையினராக இருந்து வந்துள்ளனர்.

1981 இல் அவர்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையினராக மாற்றப்பட்டு நான்காவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால் பொதுவாக தமிழ் பேசும் மக்களது எண்ணிக்கையும் வீத அளவும் குறைவடைந்து செல்கிறது. எடுத்துக் காட்டாக 1911 இல் மொத்தக் குடித்தொகையில் சிங்கள மக்களின் பங்கு 66 வீதமாகவும் தமிழ் பேசும் மக்களின் பங்கு 32.2 வீதமாகவும் காணப்பட்டது. 1971ல் இது முறையே 72 வீதமாகவும் 27 வீதமாகவும் அமைந்திருந்தது. 1981இல் மொத்தக் குடித்தொகையில் சிங்களவர் 74 வீதமாகவும் தமிழ் பேசுவோர் 25.3 வீதமாகவும் காணப்பட்டனர் . 1

நூற்றுவீத அடிப்படையில் தமிழ் பேசும் மக்களது எண்ணிக்கை குறைவடைந்து செல்வதற்குச் சில காரணங்கள் உளவெனினும் முக்கியமான காரணம் மலையக மக்களது வெளியேற்றமாகும். இவ் வெளியேற்ற நிகழ்வு இந் நூற்றாண்டின் ஒரு சோக வரலாற்று நிகழ்வென வர்ணிக்கப்படுகிறது. ஈழத்தின் மலையகப்பகுதியை அபிவிருத்தி செய்து பல தலைமுறையாக அங்கு வாழ்ந்து வந்த தமிழ் பேசும் மக்கள் இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தையடுத்து இயற்றப்பட்ட பிரஜா உரிமைச் சட்டங்களால் (1948) நாடற்றோராகவும், வாக்குரிமையற்றோராகவும் மாற்றப்பட்டனர். இப்பிரஜா உரிமைச் சட்டம் சர்வதேச மனித

[illegible], ஜெனீவா,
இந்திய பெருந்தோட்டங்களில் தொழில் புரிந்தோரை [illegible]
[illegible]
[illegible] 1971ம் ஆண்டு [illegible]
[illegible]
1983இல் [illegible]

[illegible]

[illegible] 1931ம் ஆண்டு [illegible]

மிக்கதாகவும் 5,25,253 பேர்கள் காணப்பட்டனர். இலங்கையின் மொத்த குடிசனத்தொகையில் இவர்களின் பங்கு 5.0 வீதமாகும். மொத்தத் தமிழ் பேசும் சனத்தொகையில் (87, 97, 113) மலையகத் தமிழரது பங்கு 22 வீதமாகும். இலங்கையில் 1911 முதல் 1963 வரை மலையகத் தமிழர் சிங்களவருக்கு அடுத்த பெரும்பான்மையாக [illegible] இருந்து வந்துள்ளனர்.

1981 இல் [illegible] 1911 இல் மொத்தக் [illegible] 66 வீதமாகவும் தமிழ் பேசுவோர் பங்கு 32.3 வீதமாகவும் காணப்பட்டது. 1971இல் இது முறையே 72 வீதமாகவும் 27 வீதமாகவும் அமைந்திருந்தது. 1981இல் மொத்தக் குடித்தொகையில் சிங்களவர் 74 வீதமாகவும் தமிழ் பேசுவோர் 25.9 வீதமாகவும் காணப்பட்டனர்.1

[illegible] (1948) [illegible]

உரிமைச் சாசனத்தின் 15 சரத்தை மீறும் செயலாகும். ''நாட்டுரிமை பெற ஒவ்வொரு பிரசைக்கும் உரிமை உண்டு; எவர் ஒருவரையும் சட்டவாக்கத்தின் பேரில் நாட்டுரிமை யை ஏற்கச் செய்யவோ மாற்றம் செய்யவோ கூடாது" என அம் மனித உரிமை வாசகம் கூறுகிறது 2 சுதந்திர இலங்கையின் முதல் உதை இந்தியாவை நோக்கியதாகவே அமைந்ததெனவும் எனினும் இந்தியா மலையக மக்களின் இவ் அவல நிலையை அக்கறையுடன் புத்திபூர்வமாக அணுக வில்லை எனவும் பெருந்தன்மை என தான்கருதிய அரசியல் நட்புறவுக்காக மனித வதையை நீக்க அவசரமாக எந்த முடிவையும் எடுக்கவில்லை எனவும் இந்நிகழ்வைக் காரண மாகவே சிலர் விமர்சித்தனர் 3

இலங்கை இந்திய அரசுகளுக்கிடையே நீண்டகாலமாக இழுபட்ட மலையகத் தமிழரது நாடற்றோர் பிரச்சனை 1964 இலும் 1974 இலும் இடம் பெற்ற சில ஒப்பந்தங்களின் வாயிலாக ஒரு முடிவுக்கு வந்ததெனலாம். 1964ல் சிறிமா சாஸ்திரி உடன்படிக்கை உருவாயிற்று. இதன்படி அப் போதிருந்த நாடற்றவர்களான 9,25,000 பேரில் 5,25,000 பேரையும் 'அவர்களது இயற்கை அதிகரிப்பையும் இந்தியா ஏற்றுக் கொள்வதெனவும் 3,00,000 பேரையும் 'அவர் களது இயற்கை அதிகரிப்பையும்' இலங்கை ஏற்றுக் கொள்வதெனவும் மிகுதி மக்கள் குறித்து இன்னோர் சந்தர்ப் பத்தில் முடிவுக்கு வருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. பின்னர் 1974ல் இடம் பெற்ற சிறிமா-இந்திரா ஒப்பந்தம் மிகுதியான மக்களையும் 'அவர்களது இயற்கை அதிகரிப் பையும்' அரையரை வாசியாகப் பங்கிட்டுக் கொண்டது இவ் ஒப்பந்தங்களின் நிறைவேற்றுக் கால எல்லை 15 வரு டங்களென வரையறுக்கப்பட்டது. 4 இவ் ஒப்பந்த நடை முறையைச் சுருக்கமாகக் கூறுவதாயின் தலா 7 பேர் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்படும் போது தலா 4 பேர் இலங்கைப் பிரஜா உரிமை பெற்றனர். நடை முறையின் போது பல சிக்கல்கள் தோன்றின. குறிப்பிட்ட கால எல்லைக்குள் அவற்றினை அமுல்செய்யமுடியாது போன மையால் இலங்கை மேலதிகமாக 94,000 பேருக்கு பிரஜா உரிமை வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் 1986ல் ஏற்பட்டது. இதன்படி முன்னர் இந்தியா திரும்ப வேண்டியோர் தொகை 6,00,000 பேரும் 'அவர்களது இயற்கை அதிகரிப்புமென' இருந்த தொகை 5,06,000 பேரும் 'இயற்கை அதிகரிப்பு மெனக்' குறைந்தது. எனினும் தமிழ்நாடு அரசின் பொலிஸ் அறிக்கையின் படி 1986 பெப்ரவரி மாதம் வரை இந்தியா திரும்பியோர் தொகை 4,59,410 பேராகும். இதில் 3,33,843 பேர் ஒப்பந்தத் தொகையினராகவும் 1,25,567 பேர் இயற் கை அதிகரிப்பின் எண்ணிக்கையெனவும் அறிக்கை தெரிவு படுத்துகின்றது 5 மிகுதி 1,72,157 பேரும் 'அவர்களின் இயற்கை அதிகரிப்பும்' (மொத்தம் ஏறத்தாழ 2,40,000 பேர்) இன்றும் இந்தியா திரும்புவதற்காக இலங்கையில் காத்துள்ளனர் எனக் கருதலாம். மேற்படி ஒப்பந்தங்கள் செய்து கொண்ட இரு நாடுகளுமே மலையகத் தமிழரது உரிமைகளை மதிக்கவோ வாழ்வியல் அம்சங்களாக கருத்திற் கொள்ளவோ இல்லை. தமது எதிர்கால வாழ்வைத் தாம் நிர்ணயிக்கும் உரிமை இவர்களுக்கு மறுக்கப் பட்டதோடு இரு அரசுகளாலும் அவர்கள் வர்த்தகப் பண்டங்கள் போல் கணிக்கப்பட்டே மேற்படி ஒப்பந்தங்களின் மூலம் பங்கிடப் பட்டனர். இந்தியா திரும்பிய மலையகத் தமிழர் வாழ்வும் முன்பிருந்த நிலையை விட தாழ்ந்த நிலையிலேயே அமைந் தது. இதனை இந்தியா திரும்பிய மலையகத் தமிழரிடையே நிகழ்த்தப்பெற்ற பல சமூகப் . பொருளாதார ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. 6

தமிழ் பேசும் மக்களில் 80 வீதத்தினர் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், மலையக மத்திய, ஊவா மாகாணங் களிலும் செறிந்துள்ளனர். தலைநகர் அமைந்துள்ள மேல் மாகாணத்தில் 11 வீதத்தினர் காணப்பட, மிகுதி 9 வீதத்

அட்டவணை 5.1

இலங்கையில் மலையகத் தமிழரது மாவட்டரீதியான பரம்பலும் மொத்த மாவட்டக் குடித் தொகையில் மலையகத் தமிழரது நூற்று வீதமும்

மாவட்டம்	எண்ணிக்கை	பரம்பல் நூற்றுவீதம்	மொத்த மாவட்ட குடித்தொகையில் நூற்றுவீதம்
இலங்கை	8, 25, 233	100	5.6
1. நுவரெலியா	2, 47, 131	29.9	47.3
2. பதுளை	1, 35, 795	16.5	21.3
3. கண்டி	1, 04, 840	12.7	9.3
4. இரத்தினபுரி	88, 429	10.7	11.1
5. கேகாலை	43, 879	5.3	6.4
6. களுத்துறை	33, 510	4.1	4.1
7. மாத்தளை	24, 084	2.9	6.7
8. கொழும்பு	21, 504	2.6	1.3
9. யாழ்ப்பாணம்	20, 001	2.4	2.4
10. வவுனியா	18, 592	2.3	19.4
11. மன்னார்	14, 072	1.7	13.2
12. மாத்தறை	13, 931	1.7	2.2
13. காலி	11, 069	1.3	1.4
14. முல்லைத்தீவு	10, 766	1.3	13.9
15. மொனராகலை	9, 164	1.1	33.
16. திருகோணமலை	6, 767	0.8	2.6
17. குருநாகல்	6, 427	0.8	0.6
18. கம்பஹா	5, 732	0.7	0.4
19. மட்டக்களப்பு	3; 868	0.5	1.2
20. புத்தளம்	2, 964	0.4	0.6
21. அம்பாறை	1, 410	0.2	0.4
22. அனுராதபுரம்	785	0.1	0.1
23. அம்பாந்தோட்டை	308	0.04	0.1
24. பொலநறுவை	205	0.02	0.1

தினரே ஏனைய நான்கு மாகாணங்களிலும் பரந்து வாழ்வதைக் காணலாம். இலங்கைத் தமிழரில் 73 வீதத்தினர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்வது போன்று இந்தியத் தமிழரில் 65 வீதத்தினர் மத்திய மலையகப் பகுதியாகிய மத்திய ஊவா மாகாணங்களில் செறிந்துள்ளனர். இவர்களில் 9.2 வீதத்தினர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பரந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

மலையகத் தமிழரது பரம்பலை மாவட்ட ரீதியாக நோக்குமிடத்து நுவரெலியா (30%) பதுளை (17%) கண்டி (13%) ஆகிய தேயிலைப் பெருந் தோட்ட மாவட்டங்களில் மொத்த மலையகத் தமிழரில் 60 வீதத்தினர் பரந்துள்ளதையும், இறப்பர் பெருந் தோட்ட மாவட்டங்களாகிய இரத்தினபுரி (11%) கேகாலை (5%) களுத்துறை (4%) ஆகியவற்றில் 20 வீதத்தினர் பரந்துள்ளதையும் அவதானிக்க முடிகின்றது எஞ்சிய 20 வீதத்தினரே ஏனைய பதினெட்டு மாவட்டங்களிலும் பரந்துள்ளனர்.

மாவட்ட மொத்தக் குடித் தொகையில் மலையகத் தமிழர் எந்த மாவட்டத்திலும் தனித்த பெரும்பான்மையாக இல்லாவிடினும் நுவரெலியாவில் 47 வீதத்தினராகவும், பதுளையில் 21 வீதத்தினராகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே மேற்படி மாவட்ட எல்லைகள் நுவரெலியாவிலும், பதுளையிலும் தமிழர் வாழும் பகுதிகளைச் சேர்த்து இணைக்கும் ஒரு மாற்றத்திற்குள்ளாயின், மலையக மாவட்டமொன்றில் மலையகத்தமிழர் தனித்த பெரும்பான்மையாக வருதல் சாத்தியமே. இதற்கு மாருக இன்று பெருந் தோட்டங்களிலே திட்டமிட்ட முறையில் சிங்கள மக்களின் குடியேற்றங்களே மிகுதியாக இடம் பெற்று வருவதால் மலையகத் தமிழர் பெருந்தோட்டப் பகுதிகளில் சிறுபான்மையோராக மாற்றப்பட்டுவரும் போக்கே தென்படுகின்றது. பெருந்தோட்டத்தை அரசு சுவீகரித்த பின்னர் (1975) ஏறத்தாழ 30,000 சிங்களக் குடியானவர்

கள் பெருந் தோட்டங்களில் குடியேற்றப்பட்டு தொழிலாளர்களாகப் பணி புரிகின்றுர்கள். இவர்களில் பெரும்பான்மையானேர் நுவரெலியா மாவட்டத்திலுள்ள பெரும் தோட்டங்களிலேயே குடியமர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 7. இவை தவிர வடக்கே வன்னிப் பிரதேசத்தில் மலையகத் தமிழரின் குடிவருகை இலங்கையில் அடிக்கடி இடம் பெறும் இனக் கலவரங்களினுல் அதிகரித்து வருகின்றது. வவுனியா, முல்லைத்தீவு, மன்னர் மாவட்டங்களின் மொத்தக் குடித்தொகையில் மலையகத் தமிழரது பங்கு முறையே 19, 14, 13 வீதங்களாக 1981ல் அமைந்திருந்தது. 1983 இனக்கலவரத்தின் பின்னர் வன்னிப் பிரதேசத்தில் மலையகத் தமிழரது வருகை பெருமளவு அதிகரித்துள்ளது. அட்டவணை 5.1 இலங்கையில் மலையகத்தமிழரது மாவட்ட ரீதியான பரம்பலையும் மொத்த மாவட்ட குடித்தொகையில் மலையகத் தமிழரது நூற்று வீதத்தையும் விபரமாக விளக்குகிறது.

மலையகத் தமிழ் மக்கள் சமூக பொருளாதார நிலையிலே இங்கு வாழும் ஏனையவர்களை விட தாழ்ந்த நிலையில் காணப்படுவதை பல நுண்ணாய்வுகளும், சில தரவுகளும் அவற்றுக்கான விளக்கங்களும் நிரூபிக்கின்றன. எனினும் இனரீதியான நோக்குள்ள கட்டுரைகள் சிலவும் இன்னும் சில அரசாங்கத் தரவுகளும் மலையகத் தமிழர் நல்ல நிலையில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கின்றன. வறுமை நிலைக்குரிய பல அம்சங்கள் மலையகத் தமிழரிடையே அதிகளவிற்கதிக அளவில் காணப்படுகின்றன. வருமானம், போசாக்கு, குடியிருப்பு, மருத்துவம், கல்வி, ஏனைய சமூக சேவை வசதிகள் என்பன சுகாதாரம், இவர்களிடம் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே காணப்படுகின்றன. பௌதீக வாழ்க்கைத் தரக் குறிகாட்டியும் (PQLI) ஏனைய இனத்தவர்களைவிட மலையகத் தமிழர் வாழ்க்கைத் தரம் குறைந்த நிலையில் உள்ளமையைப் புலப்படுத்துகின்றது. இக்குறிகாட்டி கணக்கிடும் ஆயுள்காலம், சிசு மரண

கல பெருக்க வீதம் பெண்களில் அதிகமாகவுள்ளது. தொழிலாளர்களாகப் பணி புரிகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் பாடசாலைக் கல்வியை [illegible] பெரும் தொகையானோர் [illegible] ஒப்பீட்டுத்தக்க வகையில், 7. இவை [illegible] உட்பட்ட [illegible] பெண்களைக் [illegible] இவர்களில் அதிகமான [illegible] இடம் பெறுவது இலங்கை [illegible] சிங்கப்பூர், மலேசியா, [illegible] பெண்களின் [illegible] மக்களின் பங்கேற்பு வீதமானது 19, 14, 13 வீதங்களாக 1981ல் அமைந்திருந்தது. 1985 இல் [illegible] பெண்களுக்கு [illegible] அதிகரித்து 5.1 இலட்சமாக [illegible] பெண் தொழிலாளர் [illegible] பெண்களின் [illegible] அதிகரித்து வருகின்றது.

பெண்களைக் [illegible] இவர்களின் [illegible] பெண்களின் [illegible] தொழிலாளர்களின் [illegible] பெண்களை [illegible] பெண்களின் [illegible] ஆகியவற்றின், உணவு [illegible] (PQLI) [illegible] பெண்களுக்கு [illegible] உடல்நலம் [illegible]

இலங்கை [illegible] 21 வீதமாகக் [illegible] வீதத்தினர் [illegible] 63 வீதத்தினர் [illegible] 0.2 வீதத்தினர் மட்டுமே [illegible]

பெண்கள் [illegible] (30%) பகுதி (17%) [illegible] (13%) [illegible] 60 வீதத்தினர் [illegible] (11%) [illegible] (5%) [illegible] (4%) [illegible] 20 வீதத் [illegible] 80 வீதத்தினரே [illegible] பாடசாலை [illegible]

[illegible] 47 வீதத்தை [illegible] 21 வீதத்தினரைக் [illegible] பெண்களின் [illegible] (1979) [illegible] 30,000 பெண்கள் [illegible]

வீத அதிகரிப்பு, பிரசவத் தாய்மார் மரண வீத அதிகரிப்புப் போன்றன இவர்கள் வறுமையில் வாழ்வதையே உறுதிப் படுத்துகின்றன.

இலங்கையிலே தோட்டத் துறையில்தான் ஏனைய துறைகளை விட குறைந்த ஊதியம் வழங்கப்படுகிறது. இவ் ஊதியம் மாதாமாதம் வழங்கப் பட்டாலும் வேலையும், ஊதியமும் ஏனைய துறைகளைப் போலன்றி நாளாந்த அடிப்படையிலேயே கணிக்கப் படுகின்றன. தோட்ட நிர்வாகத்தினர் வேலை கொடுக்கும் நாட்களுக்கேற்பவே தொழிலாளரது மாத ஊதியம் அமைகின்றது. தோட்டங்கள் தேசியமயமாக்கப் படுவதற்கு முன்பு 90 வீத தோட்டங்களில் வாரத்திற்கு 4 நாட்களுக்குக் குறைவாகவே வேலை வழங்கப்பட்டது. அப்போதைய நாட்கூலி ஆணுக்கு 7 ரூபாவாகவும், பெண்ணுக்கு 5 ரூபாவாகவும் இருந்தது. தற்போது 6 மாத காலத்திற்கு குறைந்தது 120 நாட்களுக்கு வேலை வழங்க வேண்டுமென்ற சட்டம் இயற்றப்பட்டுள்ளது. 8. இது தொழிலாளருக்கு அனுகூலமாக இருந்தாலும் தோட்ட நிர்வாகத்தினர் சட்டத்தைச் சரிவரக் கடைப்பிடிப்பதில்லை. மேற்படி சட்ட அனுகூலத்தைப் பதிவு பெற்ற தொழிலாளரே அனுபவிக்கத் தகுதியுடயவராவார். இதனல் தோட்ட நிர்வாகம் தொழிலாளரைப் பதிவு செய்வதில் கடினம் காட்டுகிறது. சமயா சமய ஊழியர்களையே நிர்வாகம் பெரிதும் விரும்புகின்றது. பல தோட்டங்களில் சமயா சமய ஊழியர் அதிகரித்துவரும் போக்கே தென்படுகிறது. இவ்வகை ஊழியர்களாக பெருமளவிற்கு தோட்டத்திற்கு அண்மைய பகுதிகளில் வாழும் சிங்களத் தொழிலாளரே வரவழைக்கப் படுகின்றுர்கள்.

தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட பின்னரும் மேற்படி தொழிற்சட்டங்கள் தொழிலாளரது வேலைநாட்களை அதிகரிப்பதில் பெரிய மாற்றமெதனையும் ஏற்படுத்தவில்லை என்பதனை 1978 இல் தேயிலைப் பெருந்திட்டத்திற்கான ஆய்வுகள் வெளிப்படுத்தின.9. இதன்படி 1978 ஏப்ரலில் வழங்கப்பட்ட சராசரி வேலை நாட்களின் எண்ணிக்கை உயர் நிலத் தேயிலைத் தோட்டங்களில் 16 முதல் 22 நாட்களாகவும் இடை நில தோட்டங்களில் 17 முதல் 19 நாட்களாகவும் தாழ் நிலத் தோட்டங்களில் 3 முதல் 16 நாட்களாகவும் அமைந்திருந்தன.10. தற்போது மேற்படி வருமான அம்சங்களில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டிருக்குமெனக் கூறுவதற்கில்லை. 1981/82 ஆம் ஆண்டிற்குரிய இலங்கை மத்திய வங்கியின் சமூக-பொருளாதார அளவீட்டின் படி தோட்டத் தொழிலாளி ஒருவரின் சராசரி மாத வருமானம் 449 ரூபாவாகவும், இது நகரத்துறையில் 1625 ரூபாவாகவும், கிராமியத்துறையில் 1077 ரூபாவாகவும் அமைந்துள்ளது.11.

கிராமிய நகர மக்களிடையே காணப்படும் குடும்ப வருமானத்தை விட தோட்டத்துறை குடும்ப வருமானம் அதிகமென சில கட்டுரையாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஏனைய துறைகளை விட தோட்டத் துறையில் குடும்ப உறுப்பினர் உழைக்கும் பண்பு அதிகமாக வுள்ளதெனச் சில தரவுகள் தெரிவிக்கின்றன. இவற்றினை நுணுகி நோக்கும் போது இவை மிகைப்படுத்தப்பட்ட தகவல்களாகவே அமைந்துள்ளதை உணரலாம். ஏனைய துறைகளிலே குடும்ப உறுப்பினரது உழைப்புகள் யாவும் தரவுகளுக்குள் அகப்படுவதில்லை. தோட்டத் தொழிலாளர் குடும்பத்தில் தான் சராசரி அங்கத்தவர் தொகை ஏனைய துறைகளை விட குறைவாக (4.8) ஆக உள்ளது. இங்கு பெரும்பாலும் கணவனும் மனைவியும் உழைப்பாளர்களாக உள்ளனர். ஏனைய துறைகள் சார்ந்த தொழிலாளர் ஒருவரின் மாத வருமானத்தை விட தோட்டத்தொழிலாளரின் முழுக் குடும்ப வருமானம் குறைவாகவே உள்ளது. இந்த வருமானத்தை பெறுவதற்கு அக்குடும்பம் பல இழப்புக்களுக்கு உள்ளாகின்

றது. பாடசாலை செல்லாத பிள்ளைகள் தொகை அதிகரிப்பதற்கும் பெண்கள், சிறுவர் பெருமளவு தொழிற் படையில் இருப்பதற்கும் மேற்படி குடும்ப வருமான நாட்டமே காரணமாகின்றது. குடும்பத் தலைவி தனது பெருமளவு நேரத்தை வேலைத் தலத்திலேயே செலவு செய்ய வேண்டியுள்ளது. இதனால் தாயின் ஆரோக்கியம் குன்றுவதோடு குழந்தைகளும் முறையான கவனிப்புக்கு உட்பட்டு வளர்க்கப்படுவதில்லை. இவர்களிடம் கல்வி இழப்பு, சிசு மரண வீதம் அதிகமாகக் காணப்படுவதற்கு இதுவே பெரிதும் காரணமாக அமைகின்றது. இவ்வாறான எதிர் காலப் பெரும் இழப்புக்களுக்கு மத்தியிலேயே குடும்ப வருமானம் பெறப்படுகின்றதென்பதையும் மனதிற் கொள்ள வேண்டியுள்ளது. இவை தவிர வறுமை நிலையை சராசரி வருமானத்தைக் கொண்டு மாத்திரம் கணிப்பது தவறு. அதற்குப் பன்முகப்படுத்தப் பட்ட பார்வை உண்டு. மலையகத்தில் கடின உழைப்புக் காணப்படுகின்றது. அதற்கேற்ப அத்தொழிலாளர்கள் ஊதியம் பெறுவதில்லை என்பதே உண்மையாகும்.

தோட்டத்துறையை ஏனைய துறைகளுடன் ஒப்பிடும் போது இதில் வேலைவாய்ப்பு அதிகம் உண்டெனவும் வேலையின்மைப் பிரச்சினை இங்கு குறைவெனவும் கூறப்படுகின்றது. 1981-82 சமூக பொருளாதார அளவீடு தோட்டத் துறையில் வேலையின்மை 6 வீதமாகவும் முழு இலங்கையில் இது 15 வீதமாகவும் காணப்படுவதைக் காட்டுகின்றது. தேசிய மட்டத்திலான வேலையின்மை பிரச்சினை வேறுபட்ட கல்வித் தரத்தின் அடிப்படையிலும் வேறுபட்ட வயதுப் பிரிவு மட்டத்திலும் இடம் பெறுவதாகும். உண்மையில் இங்கு வேலையின் தரம் என்ற அம்சமே முக்கியத்துவம் பெற்று வேலையின்மைப் பிரச்சினையைத் தோற்றுவிக்கின்றது. தோட்டத் துறை தொழிலாளரது வேலையோ கீழ்மட்ட வேலையாகும். எனவே வேலையின்மைப் பிரச்சினை குறைவாக இருக்கின்ற தன்மை அங்கு எல்லோரும் நல்ல நிலையில் திருப்திகரமான நிலையில் இருக்கின்றமையைச் சுட்டுவதில்லை.

தோட்டத்துறையில்தான் கீழ் உழைப்பு நிலை மிகவும் அதிகமாக அதாவது 34 வீதமாகக் காணப்படுகின்றது. தேசிய தரவுகள் நகரத்துறையில் இது 14 வீதமாகவும் கிராமியத் துறையில் 24 வீதமாகவும் உள்ளதைக் காட்டுகின்றன. தோட்டத் தொழிலாளி நாளாந்த அடிப்படையில் மாத ஊதியம் பெறுபவன். அவனுக்கு உழைப்புக்கேற்ப ஊதியம் கிடைப்பதில்லை. இவ் அம்சங்களைக் கீழ் உழைப்பு நிலை எனத் தரவுகள் சுட்டினும் இதனை வேலையின்மையின் கூறாகவேக் கொள்ளவேண்டும்.

தோட்டத் தொழிலாளர்கள் இங்குள்ள ஏனைய மக்கள் போன்று சாதாரண வீடுகளில் வாழவில்லை. லைன் அறைகளிலேயே அன்று தொட்டு இன்றுவரை வாழ்ந்து வருகின்றார்கள். தொடர் வீடுகள் போன்ற இந்த 'லைன்கள்' ஒவ்வொன்றும் 100 அடி நீளமும் 15 அடி அகலமும் கொண்டவை. ஒரு லைனில் 9 அல்லது 10 குடியிருப்புப் பகுதிகள் அமைந்திருக்கும். இந்த 'லைன்'களின் அத்திவாரத்திற்கும் சுவர்களுக்கும் சீமெந்து பயன்படுத்தப்படுகின்ற போதிலும் தரை களிமண்ணாலானது. 'கல்வனைஸ்' தகடுகளால் கூரை வேயப்பட்டுள்ளது. அவை உடையும் வேளை கூரை வைக்கோல் மறைப்பைப் பெறும். மேற்படி 'லைன்'களில் 10 அடி நீளமும் 12 அடி அகலமும் கொண்ட ஒரு அறையும், 5 அடி அகலம் கொண்ட வராந்தாவும் ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும். தளபாடங்கள், விறகு, மலசலகூடவசதிகள் எதுவும் இங்கில்லை. சிறிது தூரத்தே குழாய்நீர் பெறக் கூடிய வசதி சில லைன்களுக்கு உண்டு. மேற்படி சிறு லைன் அறையினுள் ஒரு குடும்பமல்ல பல குடும்பங்கள் வாழ்ந்த நிலை முன்பு சர்வசாதாரணமாக இருந்தது. இன்று அது ஓரளவு குறைந்துள்ளது. 12. மனித வாழ்வுக்குத் தகுதியற்ற மேற்படி அறைகளைத் தொழிலாளர்களுக்கு வழங்கிவிட்டு, குடியிருப்பு வசதிகள் அனைத்துத் தோட்டத் தொழிலாளருக்கும் அரசும் நிர்வாகமும் வழங்கியுள்ளதென குறிப்

பிடுகின்றமை அருவருக்கத் தக்க கூற்றுகும். மேற்படி மோசமான குடியிருப்புகள் கூட தோட்டத்தொழிலாளருக் கன்று தோட்டத்திற்கே சொந்தமானவை.

1981/82 சமூக பொருளாதார அளவீட்டின்படி மொத் தத் தோட்டத் தொழிலாளருள் 92 வீதமானோர் மேற்படி லைன்களிலேயே வாழ்கின்றனர். இவர்களில் 4 வீதமானோர் சொந்த வீடு கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். நாட் டின் கிராமியத் துறையில் இதன் வீதம் 66 ஆக அமைகின் றது. மேலும் நகரப் பகுதிகளில் 31 வீதமான வீடுகளில் அளவுக்கதிகமான ஆட்கள் வசித்து வந்தனர். கிராமியத் துறையில் இது 32 வீதமாகவும், தோட்டத்துறையில் இது 76 வீதமாகவும் காணப்பட்டது.

தோட்டத் தொழிலாளரது குடியிருப்புப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு 'லைன்' அறைகளின் தரத்தை உயர்த்துதல், சிறுகுடில்கள் அமைத்தல், உலக் வங்கிப் புனருத்தாரன திட் டத்தின் கீழ் வீட்டுவசதிகளை அபிவிருத்தி செய்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது வீட மைப்புத்திட்டத்தின் கீழும், சில திட்டங்கள் பெருந்தோட்டப் பகுதிகளில் இடம் பெற்றுள்ளன. எனினும் தோட்டங்களி லேயே குடியிருப்பு வசதிகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு இன்று வரை உயர்த்தப்படவில்லை. தோட்ட நிர்வாகத்தின் பொறுப்பி லேயே இன்றுவரை தோட்டக் குடியிருப்பு அபிவிருத்தி தங் கியுள்ளது. தோட்ட உற்பத்திச் செலவைக் குறைவாக வைத்துக்கொள்ள வழியமைக்கும் வகையில் குடியிருப்பு, சேமநல, சமூக சேவை வசதிகளுக்கான செலவுகளைக் குறைக்கவே தோட்ட நிர்வாகம் முயலுதல் வழக்கமாகும். எனவே தான் இன்று வரை தோட்டத் தொழிலாளரது குடி யிருப்பு நிலைமைகளில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி காண முடியாதுள்ளது.

தோட்டத் தொழிலாளரது சுகாதாரம், மருத்துவ, குடும்பநலம் போன்ற தேசிய தரத்தை விட மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே காணப்படுகிறது. சுகாதாரமற்ற சூழல், அசுத்த நீர்ப்பாவனை, போஷாக்கின்மை, மருத்துவ வசதிக் குறைவு, மோசமான காலநிலை, உயர் மலைகளில் ஏறி இறங்கும் கடினமான உழைப்பு போன்ற காரணிகளால் தோட்டத் தொழிலாளர்கள் அடிக்கடி நோய் வாய்ப்படுவ தோடு ஆரோக்கியமற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களிடையே பொதுவாக சுவாசம் சம்பந்தமான நோய் களும், வயிற்றுக் கோளாறுகளும் அதிகளவிற் காணப்படுகின் றன. இதற்கு அவர்கள் வாழும் மோசமான சூழலும், அசுத்த நீர்ப் பாவனையும் பிரதான காரணங்களென வைத் திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன13.

தோட்டத்திலே நல்ல வைத்தியசாலைகள் இல்லை. இருக்கும் சில மருத்துவமனையும் வசதியற்றதாகவும், தேவை யான மருந்துகளின்றியும், போக்குவரத்து வசதிக் குறைவான நிலையிலும் காணப்படும். சில இடங்களில் வைத்தியசாலைகள் இல்லாத நிலை கூட காணப்படும். இதனால் நோய் வாய்ப்படும் தொழிலாளர்களை தோட்டத்திற்கு வெளியே வெகுதூரத்தே யுள்ள அரசாங்க மருத்துவமனைகளுக்கே கொண்டு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. இதற்கு அதிகபணம் செல வாவதோடு அவசர தேவையாகச் செல்வதற்கு போக்கு வரத்து வசதிகளும் காணப்படுவதில்லை.

தோட்டத் தொழிலாளர் அதிகமாக வாழும் நுவரெலியா, பதுளை, கண்டி, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங் களே நாட்டின் சிசு மரண வீதம், பிரசவத் தாய்மார் மரண வீதம் அதிகளவு காணப்படும் பகுதிகளாகும். சராசரி ஆயுள் காலம் மேற்படி மாவட்டங்களிலேயே சராசரியை விடக் குறைவாகவும் உள்ளது. இவைதவிர தோட்டத் துறை யிலேயே நோய்வாய்ப்படுவோர் தொகை ஏனைய துறைகளை

[illegible] உணர்ந்து. [illegible] தோட்டத் தொழிலாளர்கள் [illegible] தோட்டத்தைச் சேர்ந்தவர்களே.

1981/82 ஆம் ஆண்டு [illegible] தோட்டத் தொழிலாளர் 93 வீதமானோர் [illegible] இவர்களில் 4 வீதமானோர் [illegible] 60 [illegible] 31 வீதமானோர் [illegible] 32 வீதமானோர், தோட்டத்துறையில் [illegible] 76 வீதமானோர் [illegible].

தோட்டத் தொழிலாளர் [illegible]

[illegible]

தோட்டத் தொழிலாளர் [illegible]

[illegible]

தோட்டத்திலே [illegible]

[illegible]

தோட்டத் தொழிலாளர் [illegible]

[illegible]

விட அதிகமாகக் காணப்படுவதையும் தரவுகள் தெரிவிக்கின்றன.

சுகாதாரச் சூழலை அளவிடும் குறிகாட்டியில் ஒன்ருகக் குடித்தொகை மருத்துவர் விகிதம் கொள்ளப்படுகின்றது. உலக சுகாதார நிறுவனம் மேற்கொண்ட ஆய்வொன்று தோட்டப் பகுதி மாகாணங்கள் தான் குடித்தொகை மருத்துவர் விகிதத்தில் தேசிய மட்டத்தைவிட மிகத் தாழ்ந்த நிலையில் இருந்தமையைக் காட்டிற்று, 1,00,000 பேருக்கான மருத்துவர்கள் மத்திய மாகாணத்தில் 15 ஆகவும், தாதிகள் 30 ஆகவும் காணப்பட்டனர். ஊவா மாகாணத்திலும் சப்பிரகமுவா மாகாணத்திலும் மருத்துவர்கள் 11 ஆகவும் தாதிகள் முறையே 24 ஆகவும், 35 ஆகவும் காணப்பட்டனர். தேசிய சராசரி மருத்துவர்கள் 26 எனவும், தாதிகள் 51 எனவும் காட்டியது.

கடுமையான சோகை, புரதச் சத்துப் பற்ருக்குறை, போஷாக்கின்மை என்பன தோட்டத்தொழிலாளரிடமும் அவர்களது குடும்பத்தினரிடமும் அதிகளவிற் காணப்படுவதைப் பல வைத்தியக் குறிப்புகள் தெரிவிக்கின்ற போதிலும், சில ஆய்வாளர்கள் போஷாக்கு நிலையில் தோட்டத் துறையினர் கிராமியத்துறையைவிட உயர்நிலையில் உள்ளனரென வருமானக் குறிகாட்டியை ஆதாரம் காட்டித் தெரிவிக்கின்றனர். தோட்டத் தொழிலாளர்கள் மலைகளில் ஏறி இறங்குவதாலும், மோசமான கால நிலையில் வாழ்வதாலும், கடின உழைப்பைச் செலவிடுவதால் அதிக கலோரி அலகளவு நுகர்வு இவர்களுக்குத் தேவைபடும் என்பதனை இவ்வாய்வுகள் கவனத்திற் கொள்வதில்லை. மேலும் ஏனைய துறையினரைவிட தோட்டத் தொழிலாளரின் வருமானத்தையும் உணவு வழங்கலையும் அளவிடுவது சுலபம். இது தவருன ஒப்பீட்டுத் தரவுப் பெறலுக்கு வழிவகுத்திருக்கலாம்.

1975, 76 இல் 'கெயர்' நிறுவனம் பாடசாலை மட்டத்தில் போஷாக்கு நிலை பற்றி மேற் கொண்ட ஆய்வொன்று தோட்டப் பாடசாலைப் பிள்ளைகளே போஷாக்குநிலையில் முழு இலங்கையிலும் தாழ்ந்த மட்டத்தில் உள்ளதைத் தெரிவிக்கிறது. 1980 இல் திட்ட அமலாக்கல் அமைச்சுமேற்கொண்ட போஷாக்குநிலை ஆய்வு மேற்படி ஆய்வுப் பெறு பேற்றினை உறுதிப்படுத்துவதாகவே அமைந்தது. இருந்தும் உணவு முத்திரை வழங்கலுக்கான திட்ட அறிக்கை தோட்டப் பகுதியை அதிகம் கொண்ட நுவரெலியா மாவட்டம் தான் குறைந்த தொகையான அதாவது 20 வீத உணவு முத்திரை பெறுநர்களைக் கொண்டிருந்தது. செறிவான நெற்செய்கைப் பிரதேசமான மொனராகலை மாவட்டத்தில் 68 வீதத்தினர் உணவு முத்திரை பெறுநர்களாகக் காணப்பட்டனர். இதன் தேசிய சராசரி 50 வீதமாகும். தோட்டத்தொழிலாளர் நலனில் அரசு அக்கறை செலுத்தவில்லை என்பதே இதன் உள் அர்த்தமாகும்.

தோட்டத் தேசியமயத்தை அடுத்து தோட்டப்பகுதிச் சுகாதார சேவைகள் தேசிய சுகாதார சேவைகளுடன் ஒன்றிணைக்கப்பட்டமை முன்னேற்றமான நடவடிக்கை எனினும், இன்றுவரை தோட்டப் பகுதிச் சுகாதாரச் சேவையில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதெனக் கூறமுடியாதுள்ளது. அண்மைக்காலங்களில் தோட்டப் பகுதிச் சுகாதார சேவைகளை விருத்தி செய்ய யுனிசெப், கெயர் ஆகிய நிறுவனங்களின் ஆதரவுடன் பல திட்டங்கள் தீட்டப்பட்டன. தோட்டப்பகுதிகளில் 20 க்கு மேற்பட்ட மருத்துவ மையங்களை ஆரம்பித்து அதனூடாக தாய் சேய் நலன் பேணல், தொற்று நோய்த் தடுப்பு மருந்து ஏற்றுதல், போஷாக்கு உணவு விநியோகம், குடும்பத் திட்டவசதி, சுகாதார கல்வி வசதி போன்றவற்றை அபிவிருத்தி செய்வது திட்டத்தின் முக்கிய பணிகளாக அமைந்தன. அத்துடன் குழந்தை பராமரிப்பு நிலையங்களின் தரங்களை உயர்த்துதலும் திட்டத்தின் இன்னேர் பணியாக அமைந்தது.14. இத்திட்டங்கள் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. சுகாதார சேவைகளை அபிவிருத்தி செய்வதென்பது இங்கு சமூக

பொருளாதார அபிவிருத்தியுடன் இணைவாக மேற்கொள்ளப் படும் போது தான் நற்பயனைத் தருமெனலாம்.

மலையக மக்களுக்குக் கல்வி வசதிகளை வழங்குவதில் இலங்கையிலே பிரித்தானிய ஆட்சி நிர்வாகம் பின்னிற்கின் றதென 1901 ஆம் ஆண்டில் பிரித்தானியா பொதுமக்கள் சபையிலேயே குற்றம் சுமத்தப்பட்டது. அக் குற்றச்சாட்டு இன்றுவரை நிவர்த்திக்கப்படவில்லை. நாடுதழுவி காலங்கா லமாக திட்டமிடப்பட்டு அமல்செய்யப்பட்ட கல்விச் சீர்திருத் தங்கள் எதுவும் மலையக மக்களைக் கவனிக்கவேயில்லை. 1905 ல் ஹேபார்ட் வேஸ்சின் தலைமையிலான குழு கூறியது போன்று தோட்டப் பிள்ளைகளுக்குக் கல்வி வழங்கும் பொறுப்பு தோட்ட உரிமையாளரிடமே ஒப்படைக்கப்பட்டது. அக்கல்வி முறையே மிக அண்மைக் காலம்வரை பெருமாற்றமெதற்கும் உட்படாது பின்பற்றப்பட்டு வந்தது. இலங்கையின் ஏனைய பகுதிகளில் 1920, 1939, 1947 ஆகிய ஆண்டுகளில் கல்வி தொடர்பாக பல சட்டங்கள் இயற்றப்பட்டு கல்விச் சீர்திருத் தங்கள் இடம் பெற்றன. இவற்றுள் 1947 ஆம் ஆண்டுச் சட்டத்தின் சில பிரிவுகள் மாத்திரம் தோட்டக்கல்வி பற்றிக் குறிப்பிட்டது. அதில் 5-14 வயதுக்கிடைப்பட்ட 27 பிள்ளை கள் உள்ள தோட்டத்தில் தோட்ட நிர்வாகமானது பாட சாலை ஒன்றை அமைக்க வேண்டுமென குறிப்பிட்டிருந்தது. தோட்டக்கல்வியைப் பொறுத்தவரை 1975 வரை நடை முறையிலிருந்த சட்ட விதி இதுவேயாகும். சுதந்திரத்திற்கு முன்னர் தோட்டக் கல்வி முறை தொடர்பான அரசாங்கக் கொள்கைகளானவை சுதந்திரத்திற்குப் பின்னரும் தீவிர மாற்றமெதற்கும் உட்படவில்லை என்பதை காட்டுவதற்கு இதுவே போதுமான எடுத்துக்காட்டாகும். 15.

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின் 1960, 1964 1967 ஆம் ஆண்டுகளில் இடம் பெற்ற கல்விச் சீர்திருத் தங்கள் கிராமிய பின்தங்கிய மக்களிடையே பெருமளவு

கூட்டு மொத்த சமூக விருத்தியை ஏற்படுத்திற்று. இத்த கைய சமூகவிருத்தி தோட்டப் பகுதி மக்கள் மத்தியில் இடம் பெருமைக்கு அரசின் அக்கறையின்மையே பிரதான காரண மெனலாம். 16.

பொதுவாகத் தோட்டப் பாடசாலைகளில் 5ஆம் வகுப்பு வரையுமே வகுப்புகள் இருக்கும். இந்த வகுப்புகளைக் கூட பல பிள்ளைகள் படிப்பதில்லை. 2 ஆம் 3 ஆம் வகுப்புகளில் பலர் விலகிவிடுவர். 14வயது வரை தோட்டப் பிள்ளை களுக்கு கல்வி கட்டாயம் எனச் சட்டம் உள்ளது. இதன் படி 9 ஆம் வகுப்புவரை தோட்டப்பிள்ளைகள் படிக்கவேண்டும். நடைமுறையில் இச்சட்டம் எங்கும் பின்பற்றப்படுவ தில்லை. இங்கு அடிப்படை எழுத்தறிவுக்கு மேலாக நவீன உலகின் வாழ்வியல் தேவைகளுக்குப் பொருத்தமான எக் கல்வியும் அளிக்கப்படுவதில்லை. பகல் வேளைகளிலே பெற் றோர் வேலைக்குச் சென்று விடும் போது, பாதுகாப்பாக பிள்ளைகளை வைத்திருக்கவே இப் பாடசாலைகள் இயங்கினவே யன்றி அங்கு கல்வி கற்பிப்பது பிரதான நோக்கமாக இருப்பதில்லையெனப் பலர் விமர்சிப்பர். பெருமளவுக்கு தோட்டப் பாடசாலைகள் வசதியற்ற, காற்றோட்டமில்லாத கட்டிடங்களிலேயே இயங்குகின்றன. இது முன்பு களஞ்சிய அறையாகவோ வேறு தேவைகளுக்கோ கட்டப்பட்டவை யாகும். பாடசாலை இயங்கத் தேவையான எந்த அடிப்படை வசதிகளும் மேற்படி கட்டிடங்களில் இல்லை. பாடசாலைகளுக் குத் தேவையான தளபாடங்கள், இருக்கைகள், கரும்பல கைகள், படங்கள் எதுவுமே இங்கிருப்பது அருமை. பிள்ளை கள் பெரும்பாலும் நிலத்திலேயே இருந்து படிக்க வேண்டி யுள்ளது. பல வகுப்புத் தரங்களில் கல்விபயிலும் 50 வரை யான பிள்ளைகளுக்கு கல்வி போதிக்க ஒரு ஆசிரியரை மாத் திரமே இத்தோட்டப் பாடசாலைகள் கொண்டிருக்கும். தோட்டப் பிள்ளைகள் இடைநிலைக்கல்வி, உயர்கல்வி பெற வேண்டுமாயின் தோட்டங்களுக்கு அண்மையிலுள்ள நகரங்

களுக்கேச்செல்ல வேண்டும். எல்லா தோட்டங்களும் நகருக்கு அண்மையில் அமையாததாலும், போக்குவரத்துச் சிரமங்கள் காரணமாகவும், தொழிலாளர்களின் தாழ்ந்த பொருளாதார நிலையிலும் இவ்வாறு கல்வி கற்போர் தொகை மிகக் குறைவே. இவ்வாருன சூழ்நிலையில். தோட்டக்கல்வி மேம்பாடு அடைதல் என்பது பகீரதப் பிரயத்தனமே.

1975 ஆம் ஆண்டில் தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து தோட்டப் பாடசாலைகளும் அப்பகுதிக் கல்விச் சேவைகளும், நாட்டின் தேசிய கல்விச் சேவைகளுடன் இணைக்கப்பட்டன. இதன் பயனாகத் தோட்டப் பாடசாலைகளைப் படிப்படியாக அரசாங்கம் கையேற்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி ஏறத்தாழ 860 தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்று, புனரமைக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இப் பணிக்குத் தேவைப்பட்ட நிதி அதிகமாகவும், அரசு ஒதுக்கீடு குறைவாகவும் இருந்ததால் திட்டமிடப்பட்டவாறு அபிவிருத்திகள் இடம் பெறவில்லை. யுனிசெப் நிறுவனமும் இப்பணிக்கு உதவ முன் வந்தது. பாடசாலைகளில் சகல தரங்களையும் உயர்த்துதல், ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல், சிறு பாடசாலைகளை ஒன்றிணைத்தல் போன்ற நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன. இவ் அபிவிருத்தி நடவடிக்கைகள் முறையாகத் திட்டமிடப்படாததால் பல தீமைகளை விளைவித்தன எனத் தொழிற்சங்கங்க்ள் குற்றம் சாட்டின. பாடசாலைகளை ஒருங்கிணைத்தமையால் பாடசாலைகளின் தூரம் அதிகரித்தது. இதன் காரணமாகப் பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் செல்லாது விட்டனர் எனவும், ஆசிரியர்களைப் பயிற்சிக்கு அனுப்பிவிட்டு அதற்குப் பதிலாக இன்னோர் ஆசிரியரை நியமித்து விட்டமையால் பிள்ளைகளின் கல்வி பெரிதும் பாதிப்புக்குள்ளாயிற்று என்றும் தொழிற்சங்கங்கள் குரல் எழுப்பின. மேற்படி தோட்டப் பகுதிக் கல்விப் புனரமைப்பு என்பது பாரியதோர் பணியாகும். அதற்கேற்ப முறையான திட்டங்கள் இடப்படவோ தேவையான நிதி வழங்கப்படவோ இல்லை என்

பதால் கல்வி அபிவிருத்தி குறிப்பிடத்தக்களவு இங்கு இடம் பெறவில்லை என்றே கூறப்படுகின்றது. இதனைத் தோட்டக் கல்வி பற்றிய அண்மைய தரவுகளும் உறுதிப்படுத்துகின்றன.

இலங்கை மக்களது கல்வி நிலை ஆசியாவிலே குறிப்பிடத்தக்க அளவு முதன்மை நிலையிற் காணப்படுகின்றது. 1981/82 இல் மத்திய வங்கி மேற்கொண்ட சமூக பொருளாதார அளவீட்டுத் தரவு இலங்கையின் மொத்த குடித்தொகையின் 86 வீதமானோர் எழுத்தறிவு கொண்டோரெனத் தெரிவிக்கின்றது. இதனை துறை ரீதியாக நோக்கும் போது நகர மக்களில் 90 வீதத்தினரும், கிராம மக்களில் 86 வீதத்தினரும் தோட்ட மக்களில் 65 வீதத்தினரும் எழுத்தறிவு கொண்டோராக விளங்கினர். இத்தரவுகள் கிராம நகரங்களுக்கிடையிலான வித்தியாசம் அதிக இடைவெளியைக் காட்டவில்லை என்பதனையும் மாருக தோட்டத்துறை தாழ்ந்த நிலையில் இருப்பதையும் உணர்த்துகின்றன. தோட்டத் துறையில் பெண் கல்வி மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளது. தோட்டப் பெண்களில் 53 வீதத்தினரே எழுத்தறிவு கொண்டோராவர். தேசிய மட்டத்தில் இது 81 வீதமாக உள்ளது. தோட்டத்தில் பெண் பிள்ளைகள் சிறு வயதிலேயே வீட்டுச் சுமையைப் பொறுப்பேற்க வேண்டியிருப்பதே இதற்கான பிரதான காரணமெனலாம் 17. மேலும் பாடசாலைக்கு செல்லாதோர் தொகை முழு இலங்கையிலும் 15 வீதமாக அமைந்திருக்க தோட்டப் பகுதியில் 36 வீதமாக உள்ளமைக்கு பாடசாலைகள் வசதியாக இல்லாமையும் வீட்டில் வேலை செய்ய வேண்டிய நிலையும் பிரதான காரணங்களாக அமைகின்றன. கல்வி பயிலும் தோட்டப் பிள்ளைகளின் 44 வீதமானோர் ஆரம்பக் கல்வியையும், 8 வீதமானோர் இடை நிலைக் கல்வியையும், 1.7 வீதமானோர் க. பொ. த. (சா/த) சித்தியடையும் வரை கற்போராகவும் உள்ளனர். க. பொ. த. (சா/த) சித்தியடைவோர் முழு இலங்கையிலும் 9.4 வீதமானவர்களாக அமைந்துள்ளனர். பல

கல்விச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றதெனத் தெரிவிக்கப்படும் இன்றைய காலக் கட்டத்திற் கூட நாட்டின் ஏனைய மக்களுடன் ஒப்பிட்டு நோக்கும் போது மலையக மக்கள் கல்வி வசதிகள் மறுக்கப்பட்ட தேசிய கல்வித் திட்டங்களிலிருந்து புறக்கணிக்கப்பட்ட ஒரு சமூகமாக உள்ளனரென்பதை மேற்படி தரவுகள் ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கின்றன.

இலங்கை தேயிலை நூற்றாண்டை 1967 இல் கொண்டாடியது. அதன் பின்பு 20 வருடங்களும் சென்று விட்டன. மலையகத் தொழிலாளர் வாழ்வில் அவர்களது சமூக பொருளாதார நிலையில் என்ன மாறுதல்கள் இடம் பெற்றுள்ளன? இந்த நாட்டை வளப் படுத்திய சமூகம் இன்றாவது அடிப்படை வசதிகளைத் தானும் பெற்று வாழ்கின்றதா ? இலங்கையில் வாழும் ஏனைய சமூகத்தவருடன் சரிநிகராக வாழ்கின்றதா ? காலங்கடந்து மனித வதைகள் நிறைந்த வழிகளினூடாக இலங்கை பிரஜைகள் ஆக்கப்பட்டோராவது சுதந்திரமாக அரசியல் உரிமை பெற்று வாழ்கின்றார்களா? எதுவுமில்லையாயினும் இவர்களால் தங்களது உயிர் உடமைகளையாயினும் பாதுகாத்துக் கொள்ள முடிகிறதா ? இவ்வினாக்கள் மலையகத் தமிழரதும் அவர்களது வரலாறு, சமூக பொருளாதார நிலைப் பற்றித் தெளிவுள்ள மனித நேயம் மிக்கோரினதும் உள்ளங்களில் என்றுமில்லாதவாறு இன்றைய காலகட்டத்தில் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றது. இவ்விழிப்புணர்வு இவற்றிற்கான தீர்வுகள் காணப்படும் காலம் அண்மித்து வருவதற்கான நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

உசாத்துணை நூல்கள்

1. Department of Census and Statiscs, Census of Population and Housing, Sri Lanka - 1981. Colombo 1981

Department of census and Statistics, Statistical Abstract of the Democratic Socialist Republic of

Sri Lanka - 1977, Government Publications Bureau, Colomboo, 1979

Demographic Training and Research Unit, Demorgraphic Atlas of Sri Lanka. University of Colombo 1980

மேற்படி நூல்களிலிருந்து பெறப்பட்ட குடித்தொகைத் தரவுகள் கணக்கிடப்பட்டு கட்டுரையில் விரவிவரும் குடித்தொகைப் பண்புகள் பற்றிய விளக்கங்களுக்குப் பயன் படுத்தப்பட்டுள்ளன.

2. Amnesty International South Asia Publishing Service, International Bills of Human rights Colombo, 1978 p.6

Letter from Indra Gandhi, Prime Minister of India to Srimavo Bandoranaike, Prime Minister of Ceylon. January 27, 1974. The Hindu, January 28, 1974.

3. Sivalingam R. R. The Betrayal of Indian Tamils in Sri Lanka, Part 1, Island Trust, Trichirappalli India, 1984, pp 18-24

4. Letter from Lal Bahadur Shastri, Prime Minister of India to Srimavo Bandaranaike, Prime Minister of Ceylon, Oct 30. 1964 'The Hindu' October 31, 1964.

5. Public Department (Refugee Rehabilitation), Policy note on Miscellaneous Relief and Rehabilitation of Indians overseas and Refugees Evacuees, Government of Tamil Nadu Madras, 1986, P-2

6. Centre for Research on new International Economic order. A Report on the Survey of Repatri--ates from Sri Lanka - 1980 Madras, 1981.

7. The Island, weekend magazine, 29th March, 1987 P. 9

8. Estate Labour (Indian) ordinace. Friedrich Eibert Stiftung Colombo 1984.

9. Tea Master plan Report Vol ii, Government of Ceylon, Colombo, 1978

10. Economic Review, Vol 5. No. 12, People's Bank, Colombo March, 1980 PP 3-18

11. Central Bank of Ceylon, Reports on Consumer Finance and Socio Economic Survey 1981/82 - Sri Lanka, Part 1, Statistics Department, Colombo, 1984

மேற்படி நூலிலிருந்து பெறப்பட்ட சமூக பொருளாதார தரவுகள் கட்டுரையில் பரவலாக பல இடங்களில் பயன் படுத்தப்பட்டுள்ளன.

12. Rachel Kurian "The Position of Women workers on the Sri Lankan plantation. "ILO workshop on the Situation of women workers on Sri Lankan Plantation Colombo, pp 6-11, Oct. 1982

13. Seneviratne, B. "The Health of Plantation workers" Bulletin No: 4, Peradeniya, Feb 1975.

14. Unicef, Service for Children in the estate areas, Unicef Colombo N. d.

15. Jayasuriya, J. E. Education in Ceylon before and after Independence, Colombo, 1969

16. சந்திரசேகரம், சோ, ''இலங்கையில் தோட்டப் பகுதி களின் கல்வி'' ''நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு- இலங்கை மலர்'' தை 1974

17. ரேச்சல் குரியன், இலங்கை தோட்டத் தொழில் முறையில் பெண் தொழிலாளர்கள் சர்வ தேச தோட்ட விவசாய மற்றும் சம்பந்தப்பட்ட தொழிலாளர் சம்மேள னம், (IFPAAW), திருச்சிராப்பள்ளி, இந்தியா, 1983.

7. The Island, weekend magazine 29th March, 1982 P. 9
8. Salaie Labour (Padlind) ordinance, Friedrich Ebert Stiftung Colombo, 1984
9. The Master plan Report Vol II, Government of Ceylon, Colombo, 1979
10. Economic Review, Vol 5, No. 12, People's Bank, Colombo March 1980 PP 2-18
11. Central Bank of Ceylon, Reports on Consumer Finance and Socio Economic Survey 1981/82 - Sri Lanka, Part 1, Statistics Department, Colombo 1984

[illegible]

12. Kumar Rupesinghe "The Position of Women workers on the Sri Lankan plantation" ILO workshop on the Situation of women workers on Sri Lankan Plantation Colombo, pp 6-11, Oct. 1982
13. Gunewardene, R. "The Health of Plantation workers" Bulletin No. 4, Peradeniya, Feb 1975
14. Unicef, Service for Children in the estate areas, Unicef Colombo N. d.
15. Jayasuriya, J. E. Education in Ceylon, before and after independence, Colombo, 1969

16. [illegible] 1974

17. [illegible] (SPAAW), [illegible] 1983.

ஏன் இந்தக் கொடுமை

ஏன் இந்தக் கொடுமை? மலையகத் தமிழர்களின் வாழ்க்கைக்காக யாருமே தம்மை அர்ப்பணித்துக் கொள்ள வில்லை. ஆகவே எமது மக்களின் ஒவ்வொரு குரலும் விடுதலை விடுதலை என்று ஒலிக்க வேண்டும். அதற்கு தொழிற் சங்கவாதிகளின் சுயநலப் பிடியிலிருந்து விடுதலை; கல்வி அறிவின்றி அறியாமை என்னும் இருளினில் சிக்கியிருந்த தற்கு விடுதலை; எமது உழைப்பை உறிஞ்சிக் கொழுத்த முதலாளிகளிடமிருந்து விடுதலை; எம்மை ஏமாற்றும் எத்தர் கள், அரசியல்வாதிகள், இனவெறியர்கள் இவர்களிட மிருந்து விடுதலை; எமது உரிமைகளைப் பறித்த உன்மத்தர் களிடமிருந்து விடுதலை பெறவேண்டுமென்றால் நாம் எங்கு வாழ்ந்தாலும் தமிழ்பேசும் மக்கள் ஓர் இனம் என்பதை உணர்ந்து சிங்கள ஸ்ரீலங்காவை எதிர்த்துப் போராடவேண் டும். எனவே எமது வாழ்வு வளமுற்றதாக ஒளிமயமாக இருக்கவேண்டுமென்றால் வெறும் உரிமைப் போராட்டமாக இல்லாமல் உடைமைப் போராட்டமாக மாற வேண்டும். அதற்கு முதலில் எமது மலையக மக்களின் மனதில் கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக ஊறியிருக்கும் குறுகிய மனப்பான்மை விடுபட வேண்டும். இன்றேல் தொழிற்சங்க வாதிகளையும், தார்மீகத் தலைவர்களையும் தெய்வங்களாக நினைத்து வழிபட்டுக் கொண்டிருந்தால், மலையகத் தமிழர் கள் இதற்கு முன்பு இழந்தது உரிமைகளையும், உடைமை களையும் என்றால், இனிமேல் இழப்பதற்கு எதுவுமின்றி உயி ரையும் இழக்கவேண்டி ஏற்படும். இதனை உணர்ந்து செயல் படுவோமேயானால், மலையகம் இன்று வரை எதிர் நோக்கி வந்த பிரச்சினைகள் தீர சமத்துவ சமதர்ம சமுதாயம் ஒன்றை உருவாக்குவோம்.

- தர்க்கீகம், மாசி 1981

தோட்டத் தொழிலாளரின் அரசியல் உரிமைகள் மறுக்கப்படல்

குமாரி ஜெயவர்த்தனா

1930 ஆம் ஆண்டுகளிலிருந்து இன்றுவரையும், இலங்கையின் பெருந்தோட்டத்துறையின் வரலாறு னது இலங்கையின் தொழிலாள வர்க்கத்தின் பெரும்பகுதி னராகிய இந்திய வம்சாவழித் தொழிலாளரின் பொருளா தார, சமூக நீதிகளையும் அடிப்படை ஜனநாயக உரிமை களையும் மறுத்தலாகவே அமைந்துள்ளது. இத்தொழிலாளர் களே தேயிலை, இறப்பர் ஆகிய இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களுக்காக உழைத்து அந்நிய செலாணி யில் பெரும் பகுதியை ஈட்டித் தருவோர். இவர்களது உரி மைகளைப் பறித்தல் பல வழிகளிலும் நடை பெற்றது. வாக்

குரிமையை படிப்படியாக அவர்களிடமிருந்து பறித்ததால்- பாராளுமன்ற மட்டத்திலும் உள்நாட்டு நிர்வாகத்திலும் அவர்கள் தமது பிரதிநிதித்துவத்தை இழந்தனர். இவர்களில் பெருந்திரளானோர் நாடற்றவராகி, நாட்டு மக்களில் ஏனைய பிரிவினருக்கு உள்ள சம்பள, கல்வி, சமூக, சுகாதார நலன்கள் மறுக்கப்பட்டு இந்தியாவுக்கு குடிபெயர நிர்ப்பந்திக்கப்பட்டனர். இவர்கள் 1970 ஆம் ஆண்டுகளின் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டு இறுதியாக 1977, 1981, யூலை 1983 ஆகிய காலங்களில் கொள்ளைக்கும் மரணத்துக்கும் கற்பழிப்புக்கும் ஆளாகினர்.

தோட்டத் தொழிலாளரை அரசியலில் இருந்து வெளியேற்ற முயன்ற நடவடிக்கைகள் 1920 களின் பிற்பகுதியில் சிங்கள பூர்ஷவாக்களால் தலைமை தாங்கப்பட்டன. வர்க்க உணர்வு கொண்ட தோட்டத் தொழிலாளர், இலங்கையின் ஏனைய தொழிலாளர் பகுதியினருடன் இணைதல் - நிலவும் சமூக அமைப்பிக்குப் பெரும் அச்சுறுத்தல் என்பதை உணர்ந்த சிங்கள அரசியல்வாதிகள் தோட்டத் தொழிலாளர் சிங்களவரை பலமிழக்கச் செய்திடுவர் என்ற வாதத்தை முன்வைத்து தமது கருத்தை வற்புறுத்தினர்.

இந்தியத் தொழிலாளரின் அரசியல் உரிமைகட்கெதிரான இனவாத பிரசாரம் 1920 களில் பிற்கூற்றில் சிங்கள அரசியல்வாதிகளால் முதன் முதல் மேற்கொள்ளப்பட்டது. எனினும் ஏ. ஈ. குணசிங்காவின் சமூக - ஜனநாயக தலைமையில், இன ஒற்றுமை, வர்க்க ஒருமைப்பாடு ஆகியவற்றின் உச்ச நிலையில் சிங்கள தொழிலாள .வர்க்கத்தினர் தோட்டத் தொழிலாளருக்கெதிரான பாரபட்ச நடவடிக்கைகளை வன்மையாக எதிர்த்தனர். இப்பிரச்சினை தொடர்பாக குணசிங்காவின் கொள்கைகள் மாறியபோது 1930 களிலும் 1940 களிலும் இடதுசாரிகள் இனவாதமற்ற தலைமைத்துவத்தை

நல்கி நகர பகுதிகளிலும் தோட்டத் துறையிலும் இந்தியத் தொழிலாளரின் உரிமையை நசுக்கும் நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் எதிர்த்தனர். தோட்டத் தொழிலாளரின் குடியுரிமை, வாக்குரிமை தொடர்பான பிரச்சினையில் 1928-48க்கும் இடையிலான காலப்பகுதியில் தொழிலாள வர்க்க கட்சிகள் தோட்டத் தொழிலாளரையே மிக உறுதியாக ஆதரித்தன. ஆனல் பூர்ஷவாக் கட்சிகளோ இவர்களது உரிமைகளைப் பறிக்கவே தொடர்ந்து பிரசாரம் செய்தன.

இந் நூலின் முற்பகுதியில் சிங்கள பௌத்த உணர்வின் உருவாக்கம் பற்றியும் அதன் விளைவாக பௌத்தரும் சிங்களவரும் அல்லாத கிறிஸ்தவர், முஸ்லிம்கள், மலையாளிகள் ஆகியோருடன் ஏற்பட்ட பிணக்குகள் பற்றியும் ஆராய்ந்தேன். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இந்த இனப் பிணக்குகள் இச் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறையாகக் கிளர்ந்தன. எனினும் இன எதிர்ப்புகள் ஆட்களுக்கும் சொத்துக்களுக்கும் எதிரான வன்முறையாக மாத்திரமன்றி, தோட்டத் தொழிலாளரைப் பொறுத்தவரை, ஒரு சிறுபான்மைக் குழுவின் அடிப்படை மனித, குடியியல் உரிமை மறுப்பாகவும் வளர்ச்சியடைந்தது.

1880 களிலிருந்து 1930 வரை இந்தியத் தொழிலாளரின் வருகை கணிசமான அளவு அதிகரித்த போதும் 'இந்திய பிரச்சினை" இக் காலகட்டத்தில் சிங்களவரின் எதிர்ப்பின் மையப் பொருளாக இருக்கவில்லை. 191 ஆம் ஆண்டு இந்திய வம்சாவழித் தமிழரின் தொகை 530,000 ஆக இருந்தது 4.1 மில்லியன் மொத்தச் சனத்தொகையில் இவர்கள் 12.9 வீதத்தினராவர். இவர்களில் மிகப் பெரும்பாலார், தோட்டத் தொழிலாளரும் அவர்களைச் சார்ந்தோருமே. ஏனையோர் நகரத்தில் வேலை செய்பவர்களும் வியாபாரிகளுமாவர். 1921 இல் இவர்களது எண்ணிக்கை

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

602,000 ஆக அதிகரித்தது. இவர்களில் 536,000 பேர் தோட்டத் தொழிலாளரும் அவர்களைச் சார்ந்தோருமே. இவ்வாறு பெருந்தொகையாக இலங்கையில் குடியேறுவது இலங்கை மக்களுக்கு எரிச்சலூட்டுவதாக இருந்திருக்க வேண்டும். ஆனால் 1880 ஆம் ஆண்டுகளிலிருந்து சிங்கள-பௌத்தர்களின் எதிர்ப்புக்கு இலக்கானோர் இந்திய வம்சா வழித் தமிழரைவிட எண்ணிக்கையில் குறைவாக இருந்த, ஆனால் வசதியும் வாய்ப்பும் அதிகம் பெற்றிருந்த ஏனைய சிறுபான்மை இனத்தினரே ஆவர்.

பல ஆயிரக்கணக்கான இந்தியத் தொழிலாளரின் வருகை சிங்களவரது எதிர்ப்பைச் சம்பாதிக்கவில்லை என்று கூறுவது பிழையாகும். அநாகரிக தர்மபால இந்தியத் தொழிலாளர் பற்றிய நிகழ்ச்சிக் குறிப்புகளை அடிக்கடி கூறினர். உதாரணமாக, 1902 ஆம் ஆண்டு அவர் "ஆங்கிலேய நிர்வாகத்தில் தென்னிந்தியாவின் கீழ்சாதியினர் எமது தீவில் குடியேற அனுமதிக்கப்படுகின்றனர்". என்று கூறினர். இதே போல தோட்டத் தொழிலாளர் பற்றி பல சிங்களத் தலைவர் குற்றஞ் சாட்டினர். 'கூலி' என்ற சொல் அவர்களை அவமதிக்கும் சொல்லாக ஆங்கிலம் பேசும் உயர் குழாத்தினரால் பயன்படுத்தப்பட்டது.

தோட்டத்துறையின் அமைப்பு இந்த "அடிமை முறையின் புதிய வடிவத்தை நோக்கியதாய் அமைந்தது. இங்கு கொண்டுவரப்பட்ட இந்தியத் தொழிலாளர்கள் இராணுவப் பாணிக்கும் பிரித்தானிய நிர்வாகத்தின் படிநிலை ஆதிக்கத்துக்கும், சேனைக்குச் சேர்க்கும் கங்காணியின் தந்தைமுறை கட்டுப்பாட்டுக்கும், மறியற்சாலையினையும் ஒடுக்குமுறைச் சட்டங்களையும் பொலிசையும் கொண்ட காலனித்துவ அரசின் வன்முறைக்கும் ஆளாகினர். தொழிலாளர்கள் தோட்டங்களில் 'லைன்' அறைகளில் வைக்கப்பட்டு, திரும்பிப்போக

முடியாமல் தோட்டப் பாதுகாப்புச் சேவையாலும், நாட்டின் சட்டங்களாலும் தடுக்கப்பட்டிருந்தனர். அவர்களது சுகாதார, கல்வி நிலைமைகள் பரிதாபத்திற்குரியதாயிருந்தன. அவர்களது சம்பளமோ 1927 ஆம் ஆண்டுவரையும் ஒரு நாளுக்கு ஆண்களுக்கு 33 சதவீதமாகவும் பெண்களுக்கு 25 சதவீதமாகவும் இருந்தது.

எவ்வாறுயினும் இன உறவுகளைப் பொறுத்தவரையில் மிக முக்கியமான அம்சம் யாதெனில், தோட்டத் தொழிலாளர்களுடைய வேலைக்குச் சிங்களவர்கள் போட்டியிடவில்லை என்பதாகும். தமது இனம், சமயம், அந்தஸ்து பற்றிய பெருமித உணர்ச்சியால் 'கூலி' என்ற நிலைக்குத் தள்ளப்படும் தோட்டத் தொழிலாளர் வேலையை அவர்கள் செய்ய மறுத்தனர் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருத்தாகும். தோட்டத்துறை முதலாளித்துவத்தின் வருகைக்குப் பின்னரும் சிங்கள விவசாயிகள் சிறிது நிலமாவது உடையவராய் இருந்ததாலேயே தோட்டங்களில் கூலித் தொழிலாளராய் வேலை செய்ய அவர்கள் மறுத்தனர் என்பதைச் சமீபகால ஆய்வுகள் காட்டுகின்றன. சுருக்கமாகக் கூறுவதானல் இந்த அமைப்பு, சிங்களவரை வேறு வழியில்லாது தோட்டத் தொழிலாளர் திரளைச் சேரும் அளவு இரவலராக்கவில்லை.

எனவே, 19 ஆம் நூற்றுண்டிலும் 20ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்திலும், தோட்டத் தொழிலாளர் இனவன்செயலுக்கு ஆளாகவில்லை. இந்தியாவுக்கு அவர்களைத் திருப்பி அனுப்பும்படி எவரும் கிளர்ச்சி செய்யவுமில்லை. வேலையைப் பொறுத்து போட்டி ஏற்படுத்தாமல், அரசியல் உரிமையோ, பொருளாதார உரிமையோ அற்று, தொழிற் சங்கங்களோ, வேறுவகையான இயக்கங்களோ இல்லாமல், மலைநாட்டில் புவியியல் ரீதியாகத் தனிமைப்பட்டு, சிறைப் பிடிக்கப்பட்ட தொழிலாளர் திரளாக இருக்கும்வரை, அவர்

[illegible] 1927 [illegible]

[illegible]

[illegible] 17 [illegible] 20 [illegible]

403,000 [illegible] 232,000 [illegible] 1880 [illegible]

[illegible] 1993 [illegible]

[illegible]

களது பெரும் எண்ணிக்கையைப் பற்றி எவரும் கவலைப்பட வில்லை ; அவர்கள் எத்தகைய கண்டிப்புக்கும் ஆளாக வில்லை.

1920 களின் பிற்பகுதியில் நடைபெற்ற அரசியல் யாப்புச் சீர்திருத்த விவாதங்களில் சர்வசன வாக்குரிமை பற்றிய பிரச்சனை எழுந்தபோதே தோட்டத் தொழிலாளர் களுக்கெதிரான சிங்கள பூர்ஷ்வாக்களின் முதலாவது தாக்கு தல் நிகழ்ந்தது. ஆனால், அரசியல் செயற்பாட்டுக்கு அல்ல ; அடிமைகளுக்குச் சமமான அவர்களது நிலை ஏற்றுக் கொள் ளப் பட்டது. ஆனல் அவர்கள் வாக்குரிமை பெற்று தேர்தல் முடிவுகளிற் செல்வாக்குச் செலுத்துதல், சில தேர்தல் மாவட்டங்களில் சிங்களவர் சிறுபான்மையினராகி விடுவர் என்ற பயத்தை ஏற்படுத்தி சிங்கள பூர்ஷ்வாக்களின் மேலா திக்கப் பிரசாரத்திற்கு வழிகோலியது.

டொனமூர்ச் சீர்திருத்தங்களுக்கு முன்னர் வருமானம், சொத்து, கல்வித் தகைமை என்பவற்றின் அடிப்படையில் வாக்களிக்கும் உரிமை அமைந்திருந்ததால் சனத்தொகையில் 4 வீதத்தினர் வாக்களிக்கும் தகைமை கொண்டிருந்தனர். இம் முறையில் இந்திய வம்சாவழி தொழிலாளர்கள் வாக் களிக்கும் உரிமை பெற்றிருக்காவிடினும், இந்திய வம்சா வழியினரது நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்த இரு அங்கத்தவர்கள் சட்ட நிர்வாக சபைக்கு நியமிக்கப்பட்ட னர். 1927 இல் இலங்கைக்கு வந்த டொனமூர் கொமி ஷன், இன ரீதியான பிரதிநிதித்துவத்தை நீக்கியதுடன் ''நாட்டில் நிலையான அக்கறை உடையோர் அல்லது நாட் டில் நிலையாக வசிப்போர் ஆகியோருக்கே வாக்குரிமை'' என்று கூறியதுடன் 21 வயதுக்கு மேற்பட்டோருக்கு இவ் வுரிமை அளிக்கப்படல் வேண்டும் என்றும் சிபாரிசு செய் தது.

சர்வசன வாக்குரிமை தொடர்பான பிரச்சினை குறிப் பாக பெண்களுக்கும், இந்திய வம்சாவழித் தொழிலாளருக் கும் வாக்களிக்கும் உரிமை பற்றிய பிரச்சினை, 1928 ஆம் ஆண்டு மிகுந்த வாதப் பிரதி வாதங்களை ஏற்படுத்தியது. சட்ட நிர்வாக சபையில் சிங்களவரின் பிரதிநிதி ஒருவரைத் தவிர ஏனைய பிரதிநிதிகள் யாவரும் இந்திய வம்சாவழி யினருடைய வாக்குரிமையால் சிங்களவர் அரசியல் ரீதியாக செயலற்றுப் போய்விடுவர் என்று வெளிப்படையாகக் கூறி னர். டொனமூர் கொமிஷனுடைய சிபாரிசில் அபாய அறி வித்தலாக அமைந்தது இந்திய வம்சாவழித் தொழிலாள ருக்கு வாக்குரிமையளிக்கும் பிரேரணையாகும் என்று டி. எஸ். சேனநாயக்க கூறினார். இந்தியாவைப் பொறுத்த வரையில் சிங்களவர் சிறுபான்மையினர் மாத்திரமன்றி அநீ திக்கு இரையானவர் என்றும் அவர் கருதினர்.

''சிங்களவர் துரதிர்ஷ்டம் பிடித்த சமூகத்தினர்...அவர் களுடைய தாராண்மை மறுக்கப்பட்டுள்ளது. அவர்கள் தவருக விளங்கப்பட்டுள்ளனர். மற்றவர்களின் நன் மைக்காகத் தம்மை ஒறுப்பதற்குச் சம்மதிக்கும் சிங்கள வர் போன்று வேறு ஒரு சமூகம் இருக்கும் என்றே நான் எண்ணவில்லை...இந்தியர்களுக்கு ஒரு பெரிய நாடு உள்ளது. எங்களுக்கு இச் சிறு துண்டு நிலமே உள்ளது. இந்த நாடு எங்களுக்கு வேண்டும்.'' (ஹன் சாட். 8 நவம்பர் 1928.)

சட்டசபையில் இருந்து ஏனைய சிங்கள அரசியல் வாதி களும் இதே கருத்தைக் கூறினர். பிரான்சிஸ் மொலாமூர் ''இந்திய அச்சுறுத்தல்'' பற்றித்தான் உரிய நேரத்தில் எச்சரிக்கிறேன் என்று கூறினர்.

''இது ஒரு நீண்ட நோக்கு பற்றிய பிரச்சினை ; தம் மைப் பாதுகாப்பது பற்றிய பிரச்சினை. சனத்தொகை யில் மிகப் பெரும்பான்மையினரின் உணர்வுகளுக்கே

நான் குரல் கொடுக்கிறேன். பழையகாலத்தில் இலங்கையை லிப்டன் தேயிலைத் தோட்டம் என்றனர். எதிர்காலத்தில் இலங்கையை இந்திய ஆலமரத் தோட்டம் என்று குறிப்பிடக் கூடும்."

பொதுசன வாக்குரிமை அடிப்படையிலான எதிர்காலத் தேர்தலில்-இனவாதத்தை ஒரு சுலோகமாக்குவதில் உள்ள அரசியல் உள்ஆற்றலை தெளிவாகக் கண்டார். அவரை விமர்சித்தவர்களுக்குப் பதிலளிக்கும்போது வேறுபாடு காட்டாத கொள்கைகளை ஆதரிக்கும் வேட்பாளருக்கு தேர்தலில் தோல்வி ஏற்படும் என்று கூறினர்.

> 'நான் இந்தச் சவாலை விடுக்கிறேன். அவர்கள் கிராமங்களுக்குப் போய் தமது மேடைப் பிரசாரத்தைப் பின் வருமாறு செய்யட்டும். ''என்னைச் சட்டசபைக்கு அனுப்புங்கள். நான் இலங்கையர்களுக்கும் இலங்கையர் அல்லாதவர்களுக்கும் இடையே எந்த வேறுபாடும் காட்டமாட்டேன்." அவருடைய எதிர் வேட்பாளரோ ''இலங்கைக்காக இலங்கையைக் காப்பதே எனது நோக்கம்" என்று கூறட்டும்.' (ஹன்சாட், 15 நவம்பர் 1928)

இவ்விவாதத்தில் சி. டபிள்யூ கன்னங்கராவும் 'இலங்கையின் நிலையான மக்களைச்" செயலறைச் செய்யக்கூடிய இந்திய அச்சுறுத்தல் பற்றிக் கூறி இந்தியரின் வாக்குரிமையை எதிர்க்காதோர் துரோகிகள் என்றும் சாடையாகக் குறிப்பிட்டார். (ஹன்சாட், 8 நவம்பர், 1928) சட்டசபையின் ஒரு அங்கத்தினரான வி.டி.எஸ் விக்கிரமநாயக்க என்பவரால் இப் பிரச்சனைக்கு ஒரு வர்க்கப்பார்வையும் கொடுக்கப்பட்டது.

> ''கொழும்பில் வசிக்கும் இந்தியரை விடவும் தோட்டத்து கூலியை நான் மிகவும் அஞ்சுகிறேன்...இந்தியத் தொழிலாளி காலையில் 6 மணிக்கு வேலைக்குப் போய் மாலை 6 மணிக்கே தனது கூலி லைன்களுக்குத் திரும்புகிருன். இத் தீவில் நிகழ்வன பற்றி அவனுக்கு என்ன தெரியும்? எனவே அரசியல் விடயங்களில் வாக்களிக்கும் தகைமை அவனுக்கு இல்லை என்றே கூறுவேன்."

(ஹன்சாட், 2 நவம்பர், 1928)

சட்டசபையின் சிங்கள அங்கத்தவர்களுள் புறநடையாக இருந்தவர் தொழிற் கட்சியின் அங்கத்தவரான சி.எச்.சற். பெர்ணண்டோ என்பவர் நகரத் தொழிலாளர் இயக்கத்துக்கு இவர் பத்து வருட காலம் பெரும் ஆதரவு அளித்தவர். 'செயலிழக்கச் செய்வது' பற்றிய எச்சரிக்கைக் கருத்துகளை அவர் நிராகரித்தார். இவை உண்மையற்றவை என்ருர். ''இந்திய ஆதிக்கத்தின் அபாயக் கட்டுக் கதையை" எள்ளி நகையாடினர். எவ்வாருயினும் அவர் இனவாதத் தேர்தல்களின் தீமைகளைக் குறைத்து மதிப்பிடவில்லை. டாக்டர் டபிள்யூ. ஏ. டி. சில்வாவை மேற்கோள் காட்டி அவர் பின் வருமாறு கூறினர்.

> ''இந்நாட்டில் எத்தகைய நிலையான அக்கறை எதுவு மற்ற இந்தியர்களிடம் இந் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை கையளிக்கப் போகிருேம் என்று மக்களிடம் கூறினல் அவர்கள் அதற்கெதிராக எழுச்சியுறுவார்கள் என்று காங்கிரஸ் தலைவர்... கூறினர். இந்தக் கோஷத்துடன் மக்கள் மத்தியில் செல்வது (இது ஒரு நல்ல விடயமல்ல என நான் கருதுகிறேன்.) மக்களை இலகுவாக ஒரு நடவடிக்கைக்குத் தூண்டுவதாகும் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். (ஹன்சாட் 2 நவம்பர், 1928)

இக்காலத்தில் தொழிற் கட்சியின் ஆதரவாளர்களாயிருந்த பல சிறுபான்மை சட்ட சபை அங்கத்தவர்கள் இனவாதத்தின் அபாயம் குறித்து எச்சரித்தனர். நடேச ஐயரும்

ஏ. மகாதேவாவும் ''எமக்கு இந்தியர்கள் வேண்டும்'' அத்துடன் அவர்கள் ''இலங்கையருடன் சமமான உரிமை பெற்றிருத்தல் வேண்டும் என்று தொழிற்கட்சி கூறுகிறது.'' என்றும் கூறினர். (ஹன்சாட் 8 நவம்பர், 1928)

தொழிற்கட்சியில் இல்லாத போதும் மலேயரான ரி. பி. ஜாயா இந்திய வம்சாவழியினரின் வாக்களிக்கும் உரிமையை ஆதரித்தார். ''இந்தியர்களுக்கு வாக்குரிமை அளிப்பதை தொழிற்கட்சி மிகத் தீவிரமாக ஆதரிக்கிறது. சிங்களத் தொழிலாளி தனது இந்தியச் சகோதரனுக்கு வாக்குரிமை அளிப்பதைத் தடுக்கமாட்டான்'' என்று அதன் தலைவர் கூறுகிறார். (ஹன்சாட், 8 நவம்பர் 1928.)

இன ஒற்றுமை, வர்க்க ஒருமைப்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளைக் கொண்டிருந்தது வரையும் கொழும்பு தொழிற் சங்கத்தின் தலைவராக மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த ஏ. ஈ. குணசிங்க, இந்திய வம்சாவழித் தொழிலாளரின் வாக்குரிமையை ஆதரித்தார். சிங்களப் பத்திரிகைகளில் ஒரு பகுதி இனவர்தப் பிரசாரத்தை விரைவு படுத்திய அக்காலத்தில் 1928இல் பிரைஸ் பூங்காவில் காந்தி சங்கத்தின் கூட்டமொன்றுக்குத் தலைமைவகித்த ஏ. ஈ. குணசிங்க இந்திய வம்சாவழித் தொழிலாளரின் உரிமைக்குச் சாதகமாகக் குரல் கொடுத்தார். சிங்களத் தலைவர்களை குணசிங்க தாக்கியது பற்றி சிலோன் டெய்லி நியூஸ் (1. செப்டம்பர், 1928) செய்தி வெளியிட்டது.

> ''இந்தியர்கள் சிங்களத் தொழிலாளர்களுக்குப் பெரும் அச்சுறுத்தல் என அதிகாரமுடைய சில செல்வந்தர் பேசுகின்றனர். தமது தொழிலாளர் துன்பமுறும், இடரும் உற்றபோது மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்ட, நாட்டுப் பற்றுடைய இந்தச் செல்வந்தர் என்ன செய்தனர்? தமது நாட்டு ஏழை மக்களுக்கு உதவுவதற்குப் பதில், கிராமத்தவனை அவனது சிறு துண்டு நிலத்திலிருந்து

> விரட்டியடிப்பதில் தமது சக்தியைச் செலவழித்தனர். இப்போது இவர்களுக்கு நாட்டுப்பற்று வளர்ந்துள்ளது. இந்த அக்கறைக்குக் காரணம் என்ன? ஏழைக்கு வாக்குரிமை கொடுக்கப்பட்டதன் விளைவே இது. இதே செல்வந்தர்கள் தான் விசேட கொமிஷனுக்கு சர்வசன வாக்குரிமையை எதிர்த்துக் கூறியவர்கள். தமது திட்டத்தில் தோல்வியுற்ற இவர்கள் இப்போது இந்தியர்களுக்கு வாக்குரிமை மறுப்பது பற்றிப் பேசுகின்றனர்.'

இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை ஆதரிப்பதால் ஏற்படக்கூடிய விமர்சனத்தையும், செல்வாக்குக் குறைவையும் பொருட்படுத்தாது, இந்த ஆண்டுகளில் ஏ. ஈ. குணசிங்க தைரியமான நிலைப்பாட்டை எடுத்தார். இது முப்பதாம் ஆண்டுகளில் சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றிய அவரது திடீர்க் கொள்கை மாற்றத்துக்கு நேரெதிராக அமைந்தது.

இறுதியாக, திருத்தம் செய்யப்பட்ட சிபாரிசுகள் அமுலாக்கப்பட்டபோது, இலங்கையைத் தாயகமாகக் கொண்டோர் அல்லது 5 வருடங்கள் வாழ்ந்து கல்வி, சொத்து, வருமானத் தகைமை கொண்டோர் அல்லது 5 வருடங்கள் தொடர்ச்சியாக வசித்து மேலும் நிலையாக வசிக்கும் நோக்கமுடையோருக்குக் கொடுக்கப்பட்ட நிலையான குடியிருப்புச் சான்றிதழ் கொண்டோர் என்போருக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. இச்சட்டத்தால், முதற்தடவையாக தோட்டத் தொழிலாளரில் ஒரு பகுதியினர் வாக்களிக்கும் உரிமை பெற்றனர்.

1931 இல் இலங்கையில் முதல் தடவையாக பொதுத் தேர்தல் நடந்தபோது, தோட்டப் பகுதிகளில் கணிசமான அளவு அரசியல் பிரசாரம் நடைபெற்றது. எஸ். பி. வைத்திலிங்கம் (தலவாக்கொல்லை), பெரி. சுந்தரம் (ஹட்டன்) ஆகிய இரு இந்திய வம்சாவழியினர் தேர்ந்தெடுக்கப்-

பட்டனர். பெரி. சுந்தரம் புதிய அரச கவுன்சிலில் தொழில் கைத்தொழில், வர்த்தக மந்திரியானர். 1936 இல் இந்திய வம்சாவழி வாக்காளர்களின் தொகை 145,000 ஆக உயர்ந்த போது தோட்டப்பகுதியில் அரசியல் எதிர்ப்பியக்கம் புதுப் பிக்கப்பட்டது. 1936 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இரு இந்திய வம்சாவழியினரான எஸ். பி. வைத்திலிங்கம் (தலவாக்கொல்லே), கே. நடேசஐய்யர் (ஹட்டன்) ஆகிய இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஐந்து வருடத்துக்கொரு தரம் பொதுத் தேர்தல் நடப்பதால் 1941 ஆம் ஆண்டுத் தேர்தலுக்காக மிகுந்த தயாரிப்புகள் இடம் பெற்றன. (ஆனல் 2 ஆம் உலகப்போரினல் இது பின்போடப்பட்டது.) இவ் வாண்டில் இந்திய வம்சாவழி வாக்காளர் தொகை 225,000 ஆக உயர்ந்தது. தோட்டத்துறையில் தேர்தல் உற்சாகம் பரவியதும், 1939க்குப் பின்னர் பரவிய தொழிற் சங்க ஆதரவும் அரசியல் விழிப்புக்கு வழிகோலியது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு குறிப்பிட்ட சில கட்டுப் பாடுகளுடன் வாக்குரிமை அளிக்கப்பட்டதும் தம்மைப் பதிவு செய்து, வாக்களிப்பதில் அவர்கள் காட்டிய ஆர்வமும் சிங் கள அரசியல் தலைவர்களிடையே அச்ச உணர்வை ஏற்படுத் தின. அவர்களுக்கு பாராளுமன்ற மட்டத்தில் வாக்களிக் கும் உரிமையை இல்லாமற் செய்வதில் தோல்வி அடைந் தாலும், உள்நாட்டு அரசாங்க மட்டத்தில் வாக்குரிமை மறுப்பதற்கு முயற்சி செய்யப்பட்டது.

1889 ஆம் ஆண்டு கிராமிய கமிட்டி சட்டத்தின்படி இக்கமிட்டிகளில் பங்குபற்றுதல் ஐரோப்பியர், பறங்கியர், இந்தியர் ஆகியோருக்கு மறுக்கப்பட்டது. இவர்கள் கிரா மிய வாழ்க்கையுடன் இன்றியமையாது இணைந்த பகுதியினர் அல்ல என்று இதற்குக் காரணம் கூறப்பட்டது.

கிராமியப் பகுதியில் அமைந்திருக்கும் தோட்டங்களுக்கு வரி அறவிடுவது என்றும், ஐரோப்பியருக்கும், பறங்கியருக் கும் கிராமிய உறுப்பினர் உரிமை அளிப்பதென்றும் 1937 இல் சட்டம் திருத்தப்பட்டது. ஆனல் இந்தியர்களுக்கு இவ் வுரிமை அளிக்கப்படவில்லை. இதனல் உள்நாட்டரசாங்கத் தில் இத்தொழிலாளர்கள் பங்கேற்காதவாறு தடுக்கப்பட் டனர்.

இச்சட்டத்திற்கு பெரிய எதிர்ப்பு ஏற்பட்டது. இலங்கை யிலிருந்து பல இந்தியச் சங்கள், 'இந்தியவம்சாவழியின ருடைய அரசியல் உரிமைகள் பறிக்கப்படுகிறது' என்று அரச கவுன்சிலைக் குற்றஞ்சாட்டின. இச்சட்டம் இன வேறுபாடு காட்டலின் அடிப்படையில் அமைந்தது என்று இந்திய அர சாங்கம் கூறியது. அரச கவுன்சிலில் எல். எஸ். எஸ் பி. உறுப்பினராகவிருந்த கலாநிதி என். எம். பெரேரா மந்திரி சபையின் கொள்கைகளைத் தாக்கிப் பேசினர்.

''ஐரோப்பியத் தோட்டங்களுக்கு வாக்குரிமை அளிப் பதில் அவர்களுக்கு எத்தகைய ஆட்சேபமும் இல்லை. சொத்து டையோரும், மக்களைச் சுரண்டுவோரும் வாக்குரிமை பெறு கின்றனர். நிலம் வைத்திருப்பதற்கு அதிர்ஷ்டமற்ற ஏழைத் தொழிலாளிக்கோ வாக்குரிமை மறுக்கப்படுகிறது. இருட் டடிப்பு பற்றிய கதை முழுக் கற்பனையே. இது மிகச் சிலரால் உருவாக்கப்பட்டது. இந்தியத் தொழிலாளருக்கும் இந்நாட் டிலுள்ள அதிகளவு மக்களான விவசாயி, தொழிலாளர்களுக் கும் ஒரே வகையான ஆர்வம் கொண்டவர்கள் இந்திய ராயினும் இலங்கையராயினும் போராட்டம் முதலாளி வர்க்கத் துக் கெதிரானதே.'' (ஹன்சாட், 1937. ப. 4150).

இந்த எதிர்ப்புகளின் பயனக இனவேறுபாடின்றி எல்லா தோட்டத் தொழிலாளர்களுக்கும் கிராம சங்கத்தின் உரி மையை மறுக்கும் இன்னேர் திருத்தம் கொண்டு வரப்பட் டது. ஆனல் தோட்டங்களில் வசிக்கும் சிங்களவர் மிகக் குறைவாக இருந்ததால் இந்திய வம்சாவழித் தொழிலா ளர்க்கு எதிரானதாகவே இச்சட்டம் அமைந்தது.

இந்திய வம்சாவழினயிரான நகரத் தொழிலாளரை இளைப்பாறவும், திரும்பிப்போகவும் செய்யும் நடவடிக்கைகள் 1930 களின் பிற்பகுதியில் எடுக்கப்பட்டபோது, இந்திய வம்சாவழிச் சிறுபான்மையினரான மலையாளிகள், தமிழர் ஆகியோரை எதிர்நோக்கிய நிச்சயமின்மைகள் அதிகரித்தன. பொருளாதாரத்தில் முக்கிய துறையாக இருந்த தோட்டங்களுக்கு வேலைக்காக இந்தியாவிலிருந்து குடியேறல் பற்றிய விவாதங்களுக்கு தொடர்ந்திருக்கும் வேலையில்லாத் திண்டாட்டம் வழிவகுத்தது. இதில் வினோதம் என்னவெனில், சிங்களத் தொழிலாளருடன் போட்டியிடுபவர் எனப்பட்ட நகரத் தொழிலாளரைத் திருப்பி அனுப்பப் பிரச்சாரஞ் செய்த சிங்கள பூர்ஷ்வாக்கள் தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்தியாவில் இருந்து குடிபெயர்ந்துவருவதைத் தடுப்பதற்கு எதிராக இருந்தமையாகும். ஏனெனில், இவ்வாறு தடுப்பது தோட்டத்துறைப் பொருளாதார நலன்களுக்கு எதிராக இருந்தது. இவ்வாறாயினும் 1939 இல் இந்திய அரசாங்கம் இந்தியாவிலிருந்து நகர்ப்புறத் தொழிலாளர் குடிபெயர்தலைத் தடை செய்தது.

தோட்டத் தொழிலாளரின் தொழிற் சங்கமயமாதல், தீவிரமான போராட்டங்கள் என்பவை, இவர்களது அரசியல் ஆற்றலுக்குச் சிங்களவர் பயப்படுவது அதிகரிப்பதற்குக் காரணங்களாய் இருந்தன. 1931 இல் கே. நடேசஐயர் தோட்டத்தில் முதலாவது தொழிற் சங்கத்தை நிறுவினர். ஆனால் பொருளாதார மந்தநிலையால் இது ஒருபோதும் விரைவாக முன்னேற முடியவில்லை. ஆனால் 1930 களின் பிற்பகுதியில் நிலைமை மாறியது. லங்கா சமசமாஜக் கட்சி தோட்டத் தொழிலாளரை ஒழுங்கமைத்து 1939 இலும் 1940 இலும் தீவிரமான வேலை நிறுத்தங்களை வழிநடத்தியது. இப்போராட்டங்களை முதலாளிகள் மிக வன்மையாக எதிர்த்தனர். நேருவின் ஆதரவுடன் 1939 இல் தொடங்கப்பட்ட இலங்கை இந்திய காங்கிரசும் தொழிற்சங்க நடவடிக்கைகளை ஆரம்பித்து 1940 இல் மலைநாட்டையே கொழுந்து

விட்டெரியச் செய்த வேலைநிறுத்தங்களை ஒழுங்கு செய்தது. தலைமுறை தலைமுறையாக ''பணிவிணக்க முள்ள கூலியை'' வேலைவாங்கிப் பழகிய தோட்டக்காரர் விழிப்படைந்தனர். உலகப் போரின் ஆரம்பத்தின் பின் ஏற்பட்ட அமைதியின்மையால் காலனித்துவ உத்தியோகத்தர்கள் எச்சரிக்கையடைந்தனர். தொழிற்சங்கங்களுக்கு விரைவாக அங்கீகாரம் அளிக்கப்பட்டது. தொழிற்சங்கங்களுக்கும் தோட்டத்துரைமார் ஸ்தாபனங்களுக்குமிடையில் 1940 இல் கூட்டு ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பெற்றது.

தோட்டங்களில் இடம்பெற்ற தொழிற் கிளர்ச்சியும் திடீரென ஏற்பட்ட வன்செயல்களும் சிங்களத்தலைவரை உறுதிகுலைய வைத்தது. இடதுசாரிக் கட்சிகளுடன் தொடர்பு வைத்திருந்த ஒழுங்குபடுத்தப்பட்ட தோட்டத் தொழிலாளரால் ஏற்படுத்தப்படக் கூடிய அபாயத்தை இவர்கள் உணரத் தலைப்பட்டனர். இடதுசாரிகளால் வழிநடத்தப்பட்ட நகரத் தொழிலாளர் 1945 இலும் 1946 இலும் தீவிரமான வேலை நிறுத்தங்களை மேற்கொண்டு 1947 ஆம் ஆண்டுப் பொது வேலை நிறுத்தத்தில் உச்சமடைந்த போது, இரண்டாம் உலகப்போரின் இறுதியில் ''சிவப்பு நெருக்கடி'' குறித்த எச்சரிக்கைகள் ஒலிக்கத் தொடங்கின. 1947இல் எதிர்பார்க்காத வெற்றியடைந்த இடதுசாரிக் கட்சிகளின் பிரதிநிதித்துவம் 20 ஆக அதிகரித்த பின்னர் (முன்னைய தேர்தலில் இது 2ஆக இருந்தது) தோட்ட, நகர்ப் புறத் தொழிலாளரதும் புரட்சிகரக் கூட்டு எதிர்ப்பு சிங்கள பூர்ஷ்வாக்களை மேலும் அச்சமூட்டியது

இலங்கை இந்திய காங்கிரஸ் பாராளுமன்றத்துக்கு 7 அங்கத்தவர்களை அனுப்பியபோது, தேர்தலும் தோட்டத் துறையின் ஆற்றலைப் புலப்படுத்தியது. தாம் போட்டியிடாத தொகுதிகளில் தோட்டத் தொழிலாளர் பொதுவாக இடதுசாரிக் கட்சிகளை ஆதரித்தனர். 14 தொகுதிகள் இடதுசாரி வேட்பாளர்களை அனுப்பின. தேர்தலுக்குப் பின் இலங்கை

இந்திய காங்கிரஸ் அங்கத்தவர்கள் பாராளுமன்றத்தில் எதிர்கட்சியினருடன் அமர்ந்து முக்கியமான விடயங்களில் இடதுசாரிகளுடன் சேர்ந்து வாக்களித்தமை சிங்கள பூர்ஷ் வாக்களின் மனக்கசப்பை அதிகரித்தது.

இக்கட்டுரை இடம் பெற்ற நூலின் உள்ளடக்கம்

1. இனத்துவமும் சிங்கள உணர்வும்.
2. கிறிஸ்தவ எதிர்ப்பு இயக்கம்
3. சிங்கள வர்த்தகர்களின் முஸ்லீம் எதிர்ப்பு.
4. தொழிலாள வர்க்கத்தினரிடையே இன ஒற்றுமை
5. வர்க்க, இன உறவுகளும் மலையாளத் தொழிலாளர்களும்
6. தோட்டத் தொழிலாளரின் அரசியல் உரிமைகள் மறுக்கப்படல்.
7. 'சிங்களம் மட்டும்' என்பதிலிருந்து தொடங்கிய இனக் கலவரங்கள்.
8. மார்க்சீயத்திலிருந்து சோவனிசத்திற்கு.
9. இனப்பிரச்சினையும் மக்கள் விடுதலை முன்னணியும்
10. 1970களில் சிங்கள பௌத்த சித்தாந்த மேலாதிக்கம்
11. தொடர்ந்துவரும் இன உணர்வுகள்.

□

இவ்விரு கட்டுரைகளும்

ஆய்வு

காலாண்டு இதழில் வெளிவந்தவை

□

ஈழத்திலிருந்து ஆய்வு நிறுவனத்தின்
வெளியீடாக வெளிவரும்

ஆய்வு இதழின் முகவரி :

ஆய்வு

81/1 காங்கேசன் துறை வீதி
கொக்குவில்

1